பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

விலை ரூபா: 8.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 சித்திரை 24 சனிக்கிழமை (07.05.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 139

பணப் பொலிவுடன் திருநெல்வேலியில்

WESTERN UNION

பணப் பரிமாற்றம்

விரைவானது பாதுகாப்பானது நம்பகமானது

இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு

- பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத் தேவையில்லை
- வங்கிக் கணக்கு அவசியமில்லை
- நீடிக்கப்பட்ட சேவை நேரம்
- 365 நாள் சேவை
- 10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்

THIRUMURUGAN

COM NET

T.R 021 2227310
021 2227555
021 2227560
FAX 021 2227310
E-mail: thirumurugan@eudoramail.com

46, ஆடியபாதம் வீதி,
(ப.நோ.கூ.ச. முன்பாக)
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்





கடந்த 4 ஆம் திகதி மட்டக்களப்பு தரவையில் நடைபெற்ற விடுதலைப் புலிகளின் ஜெயந்தன் படையணியின் அணிவகுப்புக் காட்சியினை படங்களில் காணலாம்.

# பொதுக்கட்டமைப்பு உருவாக

# உலகவங்கி ஆதரவு வழங்கும்

## இலங்கைக்கான பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட் உரை

(நமது புத்தள நிருபர்)

**சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து பொதுக்கட்டமைப்பினை உருவாக்குவதற்கு அரசாங்கம் எடுக்கும் சகல நடவடிக்கைகளுக்கும் உலக வங்கி ஆதரவு வழங்கத் தயாராகவிருப்பதாக உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட் தெரிவித்துள்ளார்.**

நேற்று புத்தளத்திற்கான விஜயம் ஒன்றினை மேற்கொண்ட அவர் அங்கு பொதுக் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இதனைத் தெரிவித்தார். சுனாமிப் பேரழிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்குவது அவசியமாகவுள்ள நிலையில் பொதுக்கட்டமைப்பினை விடுதலைப் புலிகளுடன் இணைந்து உருவாக்குவது தொடர்பாக அரசாங்கம் எடுத்துள்ள முயற்சிகள் பாராட்டத்தக்கதாகும். (12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. சிறைக் கைதிகளின் உண்ணாவிரதம் தொடர்கிறது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சிறைச்சாலையில் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் எண்ணிக்கை நேற்று ஒன்பதாக அதிகரித்துள்ளது. ஏற்கனவே உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள உறுப்பினர்கள் நான்கு பேர் உட்பட ஐந்து பேருடன் மேலும் இரண்டு விடுதலைப் புலி உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் இணைந்துள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களை வந்து சந்திக்க வேண்டும் எனக்கோரி இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை நேற்று முன்தினம் ஐவர் ஆரம்பித்தனர். பாராளுமன்ற (12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு எல்லைப்புறப் பகுதியில் நேற்று மூன்று சடலங்கள் மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் மூன்று இளைஞர்களின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. ... யில் இரண்டு சடலங்களும் நேற்று முன்தினம் இரவு ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொம்மாந்துறையில் ஒரு சடலமும் மீட்கப்பட்டுள்ளது.

... யில் மீட்கப்பட்ட சடலத்தை மரணவிசாரணை நிமித்தம் வைத்தியசாலைக்குச் சென்று பார்வையிட்ட பதில் நீதிபதி யே. தங்கவடிவேல் மூன்று நாட்களுக்குள் அச்

## வவுனியாவில் மௌனப் பேரணி

(வவுனியா)

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் மாமனிதர் சிவராமின் கொலையைக் கண்டித்து வன்னி மாவட்ட ஊடக

## நேற்று மூன்று சடலங்கள் மீட்பு

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் மூன்று இளைஞர்களின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

நேற்று மாலை வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஓமடியாமடு காட்டுப் பகுதியில் இரண்டு சடலங்களும் நேற்று முன்தினம் இரவு ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொம்மாந்துறையில் ஒரு சடலமும் மீட்கப்பட்டுள்ளது.

இதுவரை இச் சடலங்கள் எவையும் அடையாளம் காணப்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர். கொம்மாந்துறையில் மீட்கப்பட்ட சடலத்தை மரணவிசாரணை நிமித்தம் வைத்தியசாலைக்குச் சென்று பார்வையிட்ட பதில் நீதிபதி யே. தங்கவடிவேல் மூன்று நாட்களுக்குள் அச் சடலத்தை யாரும் உரிமைகோர முன்வராத சந்தர்ப்பத்தில் அவை அரச செலவில் அடக்கம் செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

ஏறாவூர் பொலிஸ் பிரிவில் இந்த வாரம் இடம்பெற்ற மூன்றாவது கொலைச் சம்பவம் இதுவாகும். ஓமடியாமடுவில் மீட்கப்பட்ட இரண்டு (12 ஆம் பக்கம் பார்க்க)

## மௌனப் பேரணி

(வவுனியா)
படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் மாமனிதர் சிவராமின் கொலையைக் கண்டித்து வன்னி மாவட்ட ஊடகவியலாளர் சங்கம் கண்டன மௌனப் பேரணியொன்றை நடத்தவுள்ளது. இவ் மௌனப் பேரணி எதிர்வரும் செவ்வாய்க் கிழமை வவுனியாவில் இடம்பெறவுள்ளது.

வவுனியா இறம்பைக்குளம் தேவாலயத்தில் இருந்து ஆரம்பிக்கும் பேரணியானது கடை வீதி வழியாக வவுனியா அரச செயலகத்தை (12 ஆம் பக்கம் பார்க்க)

## இங்கிலாந்துப் பிரதமராக மீண்டும் ரொனி பிளேயர் தெரிவு




(லண்டன்)
பிரிட்டிஷ் பாராளுமன்ற பொதுத் தேர்தலில் தற்போதைய பிரதமர் ரொனி பிளேயரின் தொழில் கட்சி பெரும்பான்மைப் பலத்தைப் பெற்று தொடர்ந்து மூன்றாவது தடவையாக வெற்றியீட்டியுள்ளது.

பிளேயரின் தொழில் கட்சி 353 ஆசனங்களையும், கொன்சவேட்டிவ் கட்சி 195 ஆசனங்களையும், சுதந்திர ஜனநாயகக் கட்சி 59 ஆசனங்களையும் பெற்றுள்ளது.

பிரித்தானியாவின் 646 பாராளுமன்ற (12 ஆம் பக்கம் பார்க்க)

## மிருசுவில் படுகொலை வழக்கை தொடர உயர்நீதிமன்றம் தீர்மானம்

(கொழும்பு)
இடைநிறுத்தப்பட்டிருந்த மிருசுவில் படுகொலை தொடர்பான வழக்கை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கு உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. உயர் நீதிமன்ற மூன்று நீதியரசர்கள் கொண்ட குழுவே இந்தத் தீர்மானத்தை நேற்று எடுத்துள்ளன.

இவ் வழக்குத் தொடர்பான எதிரிகளையும் சாட்சிகளையும் மன்றில் ஆஜராகுமாறு நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டுள்ளது. 2000 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19 ஆம் திகதி மிருசுவிலில் ஒன்பது பொது மக்களை கொலை செய்த குற்றத்திற்காக ஐந்து இராணுவத்தினர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ச-8)

EXPOAIR
your friend in the skies...
யாழ் – கொழும்பு
விமான பயணத்திற்கு அழையுங்கள்:
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891/6297, 0772 2349999/8888
கொழும்பில் - 011 2372952/3, வெள்ளவத்தையில் - 011 2360290/91
Email- jaffna@expoavi.com, reservations@expoavi.com
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...

# வாக்குறுதிகளை நிறைவேற்றாத ஜே.வி.பி. இன்று பெரும் இக்கட்டான நிலையில்!

## -ரவி கருணாநாயக்க

தேர்தல் காலத்தில் நாட்டு மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத ஜே.வி.பி. இன்று பெரும் சிக்கல் நிலையை எதிர்நோக்கியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஆட்சி அமைத்த காலத்திலிருந்து இன்று வரை ஜே.வி.பி. தனது சிக்கலான நிலையை சொற்களினால் மறைக்கமுடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. தற்போது ஜே.வி.பியினர் அரசியல் அமைப்புக் குழுவைச் சந்தித்து மீண்டும் அமைச்சரவைக்கு செல்ல வேண்டுமா? என்று கேட்க வேண்டுமாம். அமைச்சரவை தேவையில்லை. விருப்பு வாக்கு தேவையில்லை என்று கூறியவர்கள் நாட்டை வீழ்ச்சிக்கு இட்டுச் சென்றவர்கள் இந்த ஜே.வி.பியினர். இன்று இந்த நான்கு அமைச்சுக்களையும் வசதிகளையும் வைத்துக்கொண்டும் உரிய முறையில் செயற்படவில்லை. ஜே.வி.பி. மக்களுக்கு பொய் கூறுகின்றது.

இந்த நாட்டை ஒன்றுமில்லாததாக்கி விட்டார்கள். மேலும் இந்த நாட்டை வீழ்ச்சிக்கு இட்டுச் செல்லாமல் பொய் கூறாமல் ஆட்சி செய்ய முடியாவிட்டால் கூட்டு எதற்கு? எனவே ஒன்றும் செய்ய முடியாவிட்டால் தயவுசெய்து ஐக்கிய தேசியக் கட்சியிடம் ஆட்சியை ஒப்படைத்து விட்டு போய்விடுங்கள். இல்லாவிட்டால் சுதந்திரக் கட்சி கூறும் பொய்யையும் சேர்த்து நாட்டிற்கு சொல்லுங்கள். அரசியல் என்ற பெயரில் இந்த நாட்டை அழிக்கவேண்டாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ற-8)

# பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்கள் ஒருபோதும் புறக்கணிக்கப்படார்

## ஜனாதிபதி உறுதிமொழி

(கொழும்பு)

உத்தேச பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்கள் ஒருபோதும் புறக்கணிக்கப்படமாட்டார்கள் எனவும் பொதுக்கட்டமைப்பில் இடம் பெறும் அனைத்துக் குழுக்களிலும் முஸ்லிம்களுக்கு முறையான பிரதிநிதித்துவம் வழங்கப்படும் என்றும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உறுதியளித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற தேசிய ஐக்கிய முன்னணியும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசும் இணைந்து உருவாக்கியுள்ள முஸ்லிம் சமாதான பிரதிநிதிகளுடனான சந்திப்பின்போது ஜனாதிபதி இந்த உறுதி மொழியினை வழங்கியுள்ளார்.

பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்கள் புறக்கணிக்கப்பட்டுவிடுவார்களோ என்ற அச்சமும் பீதியும் முஸ்லிம் மக்கள் மனதில் குடிகொண்டிருக்கின்றது. இதனைத் தெளிவுபடுத்தும் பொறுப்பும் கடமையும் ஜனாதிபதிக்கு உள்ளது என்று சமாதான செயலகப் பிரதிநிதிகள் எடுத்துரைத்தார்கள்.

பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக இடம் பெற்றுவரும் கருத்துப் பரிமாற்றங்கள், மக்கள் சந்திப்புகளை முஸ்லிம்கள் புறக்கணிக்கப்பட்டு இருந்தமையை ஜனாதிபதியிடம் சுட்டிகாட்டிய பிரதிநிதிகள் சமூகத்தின் சார்பாக தமது விசனத்தையும் எதிர்ப்பையும் இச் சந்திப்பில் வெளியிட்டனர்.

அதனிடையில் குறிப்பிட்ட ஜனாதிபதி உத்தேச பொதுக்கட்டமைப்பில் இடம்பெறுவது உறுதி எனத் தெரிவித்தார். (ற-4)

# பாராளுமன்றத் தொகுதியில் சிறிமாவின் படம் திரைநீக்கம்

பாராளுமன்றத்தில் நீண்டகாலம் பிரதமர் பதவி வகித்த உலகின் முதலாவது பெண் பிரதமர் அமரர் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் உருவப் படம் ஒன்றை நேற்று முன்தினம் காலை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க திரை நீக்கம் செய்து வைத்தார்.

இவ் வைபவத்தில் பிரதமர், மகிந்த ராஜபக்ஷ, அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர் கள், எதிர்க்கட்சித் தலைவர், பாராளுமன்றத்தின் உயர் அதிகாரிகள், ஜனாதிபதியின் குடும்பத்தினர், வெளிநாட்டுத் தூதுவர் கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ற-2)

# அரசாங்கம் எதற்கு? ஆட்சியாளர் எதற்கு?

## கேள்வி எழுப்புகிறது ஐ.தே.க.

(கொழும்பு)

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை அதிகரிக்கின்ற போது இலங்கையின் எரிபொருளின் விலை உயருமாக இருந்தால் அரசாங்கம் எதற்காக? ஆட்சியாளர்கள் எதற்காக? என்று ஐக்கிய தேசிய கட்சி கேள்வி எழுப்பியுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சி அமைப்பதற்கு முன்னர் இந்தக் கேள்வியினை தம்மிடமும் கேட்டதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிச் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க சுட்டிக் காட்டியுள்ளார்.

உலக சந்தையில் மசகு எண்ணெயில் விலையேற்றம் ஏற்படும் போது இலங்கையிலும் எரிபொருளில் விலையேற்றம் ஏற்படும் என்பதை ஐக்கிய தேசியக் கட்சி ஏற்றுக்கொள்ளவில்லை. உலக சந்தையில் எண்ணெய் விலை அதிகரிக்கும்போது உள்நாட்டில் எண்ணெய் விலை அதிகரிக்குமானால் அரசாங்கம் ஒன்று எதற்கு?

இந்த நிலையில் அரசாங்கத்தின் நிர்வாகச் சீரின்மை காரணமாக ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்து செல்வதே எரிபொருளின் விலையேற்றத்திற்கு காரணமாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ற-4)

# சட்டவிரோத மின்பாவனை தென்மராட்சியில் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சியில் சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பெறுவோரின் தொகை அண்மைக்காலங்களில் அதிகரித்துவருவதாக தெரியவருகின்றது. இதனால் சட்டபூர்வமான முறையில் மின் இணைப்புப் பெறுவோர்களுக்கான மின் விநியோகம் அடிக்கடி பாதிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

சட்டவிரோதமாக மின் இணைப்பு பெறுபவர்களது மின் இணைப்புகளை துண்டிக்கும் பணியில் இலங்கை மின்சார சபை ஊழியர்கள் சாவகச்சேரி பொலிஸாரின் உதவியுடன் அண்மையில் ஈடுபட்டனர். (ற-16)





திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீநீலாயதாஷி சமேத ஸ்ரீகாயாரோகண சுவாமி

ரதோற்சவ சிறப்புமலர் - 2005

குருவின் ஆசிச் செய்தி

அடியார்கள் பிணிதீர்க்கும் ஸ்ரீ நீலாயதாஷி ஸமேத காயாரோகணர் பஞ்சரதப் பவனி பார்க்கும் பக்தர்களுக்கும் மற்றும் அடியார்களும் அறம், பொருள், இன்பம், வீடு எனும் பதினாறு பெறுபேறுகளையும் அடைந்து என்றும் இந்த நாட்டு மக்களுக்கு நிரந்தர சமாதானம் கிடைத்து மங்களகரமாக வாழ காயாரோகணர் திருவடிகளை வணங்கி வாழ்த்துகின்றேன்.

இப்படிக்கு
பிரதான சிவாச்சாரியார்
சதா - சிவகுமாரக்குருக்கள்
சுபம்



இன்று (07.05.2005) சனிக்கிழமை
காலை 7.00 மணிக்கு தேர்

நல்லை ஆதீன முதல்வரின் ஆசிச் செய்தி

திருநெல்வேலியில் எழுந்தருளி அருள்பாலிக்கும் அருள் மிகு ஸ்ரீ நீலாயதாஷி சமேத ஸ்ரீகாயாரோகண சுவாமி இன்று தேரேறி அடியார்களுக்கு அருள் பாலிப்பதற்காக திருவீதி வலம்வருகின்ற திருக்கோலம் பார்க்கப் பார்க்கத் தெவிட்டாத திருக்காட்சியாகும்.

துன்ப துயரங்கள் விலகி இன்னல்களும் இடுக்கண்களும் அகன்று இனிமேலாவது சந்தோஷ வாழ்வுவாழ எம்பெருமான் திருவருள்முன் நிற்கவேண்டும்.

தேர்த் திருவிழா மஹோற்சவம் அழித்தலைக் குறிப்பதாகும். எனவே அநியாயங்களையும், அக்கிரமங்களையும் அழித்தொழித்து துன்பம் இல்லாத வாழ்வருள அவன் திருவடிகளைப் பணிந்து இன்றைய தேர்த்திருவிழா சிறக்க வாழ்த்துகிறோம். என்றும் வேண்டும் இன்ப அன்பு.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

சுத்தமாகவும், சுகாதாரமாகவும் நறுமணங்கமழும் சுவையில் தயாரிக்கப்படும் உணவுக்ளை உண்டு மகிழ்ந்திட

கண்ணன் லொட்ஜ்

இல.06, சேர் பொன் இராமநாதன் வீதி,
பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி

உங்கள் அனைத்துவகையான பொருட் தேவைகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரேஇடம்

SHAN CAFENI SUPER MARKET
பல்பொருள் வாணிபம்
187/2 பரமேஸ்வராச் சந்தி,
பலாலி வீதி - திருநெல்வேலி

J.K பேப்பர், கலர் பேப்பர், Rotomac pen camlin product ஏகவிநியோகஸ்தர்கள், கல்விசார் உபகரணங்கள், அழகுசாதன அன்பளிப்புப் பொருட்களின் விற்பனையாளர்கள் மற்றும் நிழற்படப் பிரதி, தொலைத்தொடர்பு சேவைகள் என்பவற்றிற்கு நாடுங்கள்

கிருபா ரேடிங் சென்ரர்

இல.2 பரமேஸ்வராச் சந்தி
திருநெல்வேலி
T.P : 222 2104

# சமாதானச் சூழலின் நம்பிக்கையை தற்போது மக்கள் இழந்துவிட்டனர்

## க.கா. குழுத் தலைவரிடம் மன்னார் அரசியல்துறைப் பொறுப்பாளர் எடுத்துரைப்பு

(மன்னார்)

சமாதானச் சூழலின் நம்பிக்கையை மக்கள் இழந்துவிட்டனர் என இலங்கை போர்நிறுத்தக் கண காணிப்புக் குழுத் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்டிடம் மன்னார் மாவடட அரசியல்துறைப் பொறுப் பாளர் எஸ்.இனியவன் எடுத்துரைத் துள்ளார்.

நேற்றுமுன்தினம் காலை 9.30 மணியளவில் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற விசேட சந்திப்பிலேயே இவ்விடயம் எடுத்துரைக்கப்பட் டுள்ளது.

இச்சந்திப்பில் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் மற்றும் அவரது திட்ட ஆலோசகர் ஸ்ரூபேக்ஸ் ரோன், உதவியாளர் மாஸ்லன்ட்ரேப்ரோன் மர்வம், முன்னார் மாவட்டக் கண்காணிப் புக் குழுத் தலைவர் பின்பினேன்ட் ஸ்ரட், சட்ட ஆலோசகர் மக்னஸ் நோர்ட்லட் ஆகியோரும் தமிழீழ விடுதலைப் புலிகள் சார்பில் மன்னார் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எஸ்.இனிய வன், மன்னார் நகரப் பொறுப்பாளர் கா.முடியரசன்,மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் நிலவரசி, நானாட்டான் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் வசந்தன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பில்,

தற்போதைய சமாதான சூழல் குறித்து மக்களின் நம்பிக்கை யீனம் இராணுவம், பொலிஸாரின் நெருக்குவாரங்கள்,

மக்களின் உணர்வு கலந்த எழுச்சி நாட்களை நடாத்தும் சந் தர்ப்பங்களில் படையினர் ஏற்ப டுத்தும் முட்டுக்கட்டைகள்,

சமாதானச் சூழலில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்த விதி முறைக்கு அமையப் படையினர் மக்களின் குடியிருப்புக்களில் இருந்து விலகாமை, இடங்களை மீள ஒப்படைக்காமை போன்ற விடயங்கள் குறித்து கண்காணிப் புக்குழுத் தலைவரிடம் எடுத்துக் கூறப்பட்டது.

அத்துடன், மக்கள் மீளக் குடியமர முடியாத நிலையில் இராணு வம் நிலை கொண்டுள்ளமை, பொது இடங்கள்,பாடசாலைகள், வைத்தியசாலைகளுக்கு அருகில் மக்களுக்கு இடைஞ்சலாக் படை யினர் நிலை கொண்டுள்ளமை, அரச படைகள் சட்டவிரோதமான பல செயல்களுக்கு துணை போவ துடன் அவற்றில் அக்கறை கொள்ளாமை என்பன பற்றியும் மன்னார் மாவடட அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ்.இனியவன் இச் சந்திப்பில் சுட்டிக்காட்டினார்.

இந்தச் சந்திப்பின் போது,

இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் குறிப்பிடுகையில்,

தொடர்ந்தும் இது பற்றிய கலந்துரையாடல்கள் ஏற்படுத்தப் படும் என்றும் சமாதான சூழல் பற்றி மக்களுக்கு நம்பிக்கை யூட்டும வகையில் செயற்பாடுகள் மீள வலியுறுத்தப்படும் எனவும் தெரிவித்தார். (ற)

## ஜே.வி.பி அமைச்சர்களின் பங்குபற்றல் குறித்து மத்திய செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்படும்

### அனுரகுமார திஸநாயக்க

(கொழும்பு)

எதிர்வரும் அமைச்சரவைக் கூட்டத்தில் ஜே.வி.பியை பிரதி நிதித்துவப்படுத்தும் அமைச்சர் களின் பங்குபற்றல் குறித்து அதன் அரசியல் குழு மற்றும் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்படுமென அமைச் சர் அனுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த புதன் கிழமை இடம் பெற்ற அமைச் சரவைக் கூட்டத் திலிருந்து கட்சி யின் 4 அமைச் சர்கள் அகன்று சென்றுள்ளனர்.

மின் சார சபை புனரமை ப்புத் தொடர் பான அமைச் சரவைப் பத்தி ரத்தை, மீண்டும் அமைச்சரவைக் குழுவில் சமர்ப் பித்ததினால் இந்தத் தீர்மா னத்தை எடுக்க நேர்ந்ததாக கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் தெரிவித்தார்.

ஜே.வி.பியினராகிய நாம் அர சுக்கு எதற்கு ஆதரவளித்தோம். 7.00 மணிக்கு யோசனைகளை கொண்டு வந்துவிட்டு 7.30 வரை வேறு யோசனைகள் பற்றிக் கலந் துரையாடிவிட்டு, 9.30க்கு குறிப்பிட்ட யோசனைக்கு கையுயர்த்தக் கூடிய அறிவுக்கூர்மை அமைச்சர் களுக்கு எவ்வாறு இருக்கும்?

அவர்களுக்கு என்ன, நமக்கும் தான் அவ்வாறான புத்திக்கூர்மை யில்லை. இல்லாதபடியால்த் தான் இதற்கு ஒத்துக்கொள்ள முடியாத நிலைக்கு வந்தோம். எனவேதான் நாம் இந்த அமைச்சரவையில் இதனை அங்கீகரிக்க முடியாது என்ற நிலைப்பாட்டுக்கு வந்தோம்.

இதற்கும் அப்பால் கருத்து களை எவ்வாறு தெரிவிப்பது,

எவ்வாறு அமைச்சரவையில் பங்கு பற்றுவது என்றும் அவர் மேலும் கேள்வியெழுப்பினார். (ர-8)

## இராசி பலன்

**07.05.2005**
**சித்திரை 24, சனிக்கிழமை**
**சதுர்த்தசி பிற்பகல் 2.48 மணிவரை**
**அச்சுவினி முன்னிரவு 07.02 மணிவரை**
**சுபநேரம் 2.55 - 4.25 மணிவரை**
**இராகுகாலம் 8.55 - 10.25 மணிவரை**
**அக்கினி நாள் ஆரம்பம்**

| | |
|---|---|
| மேடம் | நண்பர்கள் உதவி, ஆழ்ந்த சிந்தை, நல்ல முயற்சி, சயன சுகம். |
| இடபம் | பிதா சிந்தை, கோபப்படுதல், பணவிரயம், காரிய தாமதம் |
| மிதுனம் | காரிய நன்மை, போசன நன்மை, தொழில் நன்மை, நல்ல வரவேற்பு |
| கடகம் | சுப நிகழ்வு, கடின உழைப்பு, பிறர் உதவி, காரிய நன்மை |
| சிங்கம் | ஆன்றோர் மதிப்பு, உடல் உழைப்பு, வயற்று வலி அச்சமான நிலை |
| கன்னி | வீண் தொல்லை, காரிய தடங்கல், போசன சுகம், தர்மம் |
| துலாம் | திடீர் பயணம், போசன சுகம், அபூர்வ சந்திப்பு, தொழில் நன்மை |
| விருச்சிகம் | சத்துரு ஜெயம், சுக வாழ்வு, பண வருவாய், முயற்சி கைகூடும் |
| தனுசு | வியாபார நன்மை, காரிய இடையூறு, குடும்பக் கவலை, ரோக நிலை |
| மகரம் | அற்பர் உறவு, பயந்த சுபாவம், புதிய விடயம், கல்வியில் ஆர்வம் |
| கும்பம் | இனிய அனுபவம், அந்நியர் சந்திப்பு, வாக்கு மேன்மை, புதிய பொருள் சேர்க்கை. |
| மீனம் | மதிப்புக் குறைவு, காரிய தாமதம், பொருள் விரயம், ரோக நிலை |

**பழைய நேரப்படிகணிப்பிடப்பட்டது**

**-வளவன்**

## விஷமிகள் தொல்லை

(கோப்பாய்)

இரவு வேளைகளில் வீடுகளுக்குக் கல்லெறியும் செயற்பாடுகள் மீண்டும் கோப்பாய் மத்திப் பகுதியில் ஆரம்பமாகியுள்ளன.

தனிப்பட்ட பகைமைக்ளை மையப்படுத்தி குறிப் பிட்ட சில விஷமிகள் இந் நடவடிக்கையிலீடுபட்டு வருகின்றனர்.

இதனால் அயலிலுள்ளோர் இரவு வேளைகளில் அச்சத்துடன் பொழுதைக் கழிக்க வேண்டிய துர்ப் பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. (ற-79)

## மஹா கும்பாபிஷேகம்

(கற்கோவளம்)

புலோலி பர்வதவர்த்தினி தேவஸ்தான மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 13ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 8.45 மணிமுதல் 9.50 வரை நடை பெறவுள்ளது. (ற-104)

## புதிய தெரிவு

(புங்குடுதீவு)

புங்குடுதீவு ஊரதீவு பாணாவிடை சிவன் தேவஸ் தானத்துக்கு புதிய ஆலய பரிபாலன தர்மகர்த்தா சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை ஆலய மண்டபத்தில் நடை பெற்ற கூட்டத்திலேயே புதியசபை தெரிவு செய்யப் பட்டது.

இதில் தலைவராக பொன்.வைரமுத்து, செயலா ளராக க.குலசேகரம், பொருளாளராக நா.தனபால சிங்கம், எண்பார்வையாளராக இ.தவராசா, பொதுப் பிரதிநிதி எஸ்.கே.சண்முகலிங்கம், காப்பாளராக வட கோவை மு.பரமசாமி குருக்கள் ஆகியோரும் உறுப்பின் களாக 10 பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.(ற-126)





**அண்மையில் புங்குடுதீவு நயினாதீவு ப.நோ.கூ சங்கத்தின் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அரைக்கும் ஆலை திறப்புவிழா இடம்பெற்றது. இதில் யாழ்.மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் ஆலையை நாடாவெட்டி திறந்து வைப்பதையும் பெயர்ப்பலகையினை புங்.-நயி.-ப.நோ.கூ.சங்கப் பொது முகாமையாளர் செ.எ.செல்வவதனா திரைநீக்கம் செய்வதையும் சங்கத் தலைவர் ப.கனகலிங்கம், இயக்குநர் சபை உறுப்பினர் எஸ்.கே.சண்முகலிங்கம் மற்றும் பொதுச்சபை பிரதிநிதிகள், பணிப்பாளர்கள் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.**

(படம்:-புங்குடுதீவு செய்தியாளர்)

## விவாத அரங்கு - 8

விடயம்

**நம்மவர்கள் வெளிநாடு சென்றதனால் எமது கலாசாரம்:**

- ✧ **சீரழிந்துள்ளது.**
- ✧ **சீர்பெற்றுள்ளது.**

நடுவர்: சிரேஷ்ட சட்டத்தரணி
திரு.சி.சிவநேசன்

*உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி வையுங்கள்.*

அனுப்பவேண்டிய முகவரி :
விவாத அரங்கு, வலம்புரி,
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

## இன்று ஒரு தகவல்

# சித்திகள்

ஒரு சாமியார் இருந்தார். நிறைய தவம்செய்து பல சித்திகள் பெற்றார். சித்து வேலைகளைச் செய்ய ஆரம்பித்தார். இதன் காரணமாக கொஞ்சநாளில் அவருக்கு தற்பெருமை வந்துவிட்டது. அவர் உண்மையாகவே மிகவும் நல்லவர். சாது. நல்ல குணமெல்லாம் அவரிடம் நிறைய இருந்தது. இருந்தாலும் தற்பெருமை அவரைவிட்டுப் போகவில்லை.

இது அந்த ஆண்டவனுக்கே பொறுக்கவில்லை. யோசித்துப் பார்த்தார். இவரது தற்பெருமையைப் போக்குவதற்காக ஏதாவது செய்யவேண்டும் என்று முடிவுசெய்தார். உடனே ஒரு சந்நியாசியின் கோலத்தில் அந்த சாது இருந்த இடத்திற்கு வநதார். "சுவாமி நீங்கள் நிறைய சித்திகள் அடைந்திருப்பதாகக் கேள்விப்பட்டேன் அதுதான் உங்களைப் பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன்" என்றார். சாது உடனே தன்னைப் பார்ப்பதற்காக வந்திருந்த அந்த சந்நியாசியை மிகவும் மரியாதையுடன் அழைத்து உட்காரவைத்தார்.

அந்த நேரம் பார்த்து அந்த வழியாக ஒரு யானை போய்க் கொண்டிருந்தது. சந்நியாசி அதைப்பார்த்தார். உடனே அந்த சாதுவிடம் கேட்டார் "சுவாமி நீங்கள் நினைத்தால் இந்த யானையைக் கொல்லமுடியுமா?" என்றார். "ஓ! செய்துவிடலாமே! அது என்ன பெரிய காரணம்! என்றார். ஒருபிடி மண்ணைக் கையிலெடுத்தார். ஏதோ சொல்லி மந்திரிததார். அதன்பின் அநத மண்ணை அந்த யானை மீது வீசினார். அவ்வளவுதான உடனே அந்த யானை கீழே சுருண்டு விழுந்து இறந்துபோனது.

சந்நியாசி இதைப் பார்த்தார். "ஆகா! எப்படிப்பட்ட சக்தி உங்களுக்கு? அபாரம் ஒருபெ... யானையை சுலபமாக கொன்றுவிட்டீர்களே" என்றுகூறி சாதுவை மிகவும் பாராட்டினார். இந்தப் பாராட்டைக் கேட்டவுடன் அந்த சாதுவுக்கு தலைகால்புரியவில்லை. மிகவும் சந்தோஷமும், பெருமையும் அடைந்தார்.

இப்போது அந்த சந்நியாசி மீண்டும் கேட்டார். "நல்லது! இப்போது செத்துப்போன அந்த யானைக்கு மீண்டும் உயிர் உண்டாக்க முடியுமா?" என்றார். "ஓ! செய்துவிடலாமே! அதுவும் ஒன்றும் பெரிய காரியமில்லை" என்றார். சாது இப்படிக் கூறிவிட்டு மீண்டும் ஒருபிடி மண்ணைக் கையில் எடுத்தார். அந்த யானை மீது வீசினார். அவ்வளவு தான், அந்த யானை 'அசைய ஆரம்பித்து மீண்டும் எழுந்து நின்றுகொண்டது.

இப்போது அந்த சந்நியாசி கேட்டார் "சுவாமி உங்களிடம் உள்ள சக்தி உண்மையிலேயே மிகவும் பெரியதுதான். அதில் கொஞ்சம் கூட சந்தேகமில்லை. ஆனால் நான் உங்களிடம் ஒரு கேள்வியை மட்டும் கேட்க ஆசைப்படுகிறேன் என்றார். கேள் என்றார் சாது. "இப்போது நீங்கள் ஒரு யானையைக் கொன்றீரகள் அதன்பின் அதற்கு உயிரைக் கொடுத்து எழவைத்தீர்கள். சரி 'இருந்தாலும் இதனால் உங்களுக்குக கிடைத்த நன்மை என்ன? இதன்மூலம் உங்களுக்கு என்ன ஆன்மீக முன்னேற்றம் கிடைத்தது. ஆண்டவனிடம் போவதற்கு இது ஏதாவது உதவி செய்ததா? இதுதான் என் கேள்வி" என்றார் அந்த சந்நியாசி.

சாது கண்ணைத் திறந்து பார்த்தார். எதிரில் அந்த சந்நி யாசி இல்லை. மறைந்துவிட்டார்.இவர் அதன்பின்புதான் யோசிக்க ஆரம்பித்தார். அவரது தற்பெருமை அவரைவிட்டு விலகிப் போய்விட்டது. சித்திகள் கடவுளைக் காட்டுவதில்லை என்பதைக் காட்டுவதற்காக ஸ்ரீராமகிருஷ்ணர் சொன்னகதை இது.

கல்லூரியில் படிக்கும் காலத்தில் நாமும் சில சித்து வேலைகள் செய்ததுண்டு. ஆனால் அதற்குப் பெயர் மஜிக். ஆண்டு விழா நேரத்தில் மஜிக்ஷோ நடத்துவதாக முடிவு செய்தோம் ஒரு சிறிய பெட்டி அதற்கு இரண்டு பக்கமும் கதவு. நடுவில் ஒரு தடுப்பு இருக்கும் ஒரு பக்கம் மண்ணை அள்ளிப்போட்டு அடுத்த பக்கம் திறந்து சர்க்கரையாக அள்ளிக் கொடுப்போம். ஏனென் றால் ஏற்கனவே அதற்குள் சர்க்கரையைப் போட்டு வைத்திருப் போம்.

இதில் அன்று ஏற்கனவே அதற்குள் இனிப்பை போட்டு வைத்தோம். காலைநேரம் ஒரு சிறுவனை தயார்செய்துவிட்டோம் "இதோ பார் தம்பி மேடையில் உனக்கு என்ன வேண்டுமென்று கேட்போம். நீ எனக்கு இனிப்பு வேண்டும் என்று சொல்ல வேண்டும் என்று பயிற்சி கொடுத்திருந்தோம்.

மாலையில் மேடையில் மஜிக்ஷோ நடந்து கொண்டிருந்தது. மந்திரவாதி சிறுவனை அழைத்து "உனக்கு இனிப்பு வேண்டுமா? லட்டு வேண்டுமா? அல்வா வேண்டுமா?" என்று கேட்டார். சிறுவன் விழித்தான். "உனக்கு என்ன வேண்டுமென்று கேட்போம்" என்று தானே காலையில் சொன்னார்கள். ஆனால் இப்போது இப்படி அது வேண்டுமா? இது வேண்டுமா? என்கிறீர்களே என்று குழப்பிவிட்டான். சரி எது வேண்டுமானாலும் கேட்கலாம் போலிருக்கிறது என நினைத்துக்கொண்டு "எனக்கு அல்வா வேண்டும்" என்று கேட்டான்.

இதுவரை அவன் முழித்துக்கொண்டிருந்தான். இப்போது மந்திரவாதி முழிக்கஆரம்பித்துவிட்டார். மெதுவாக அவ னுக்கு மட்டும் காதில் விழக்கூடிய மாதிரி "இனிப்பு, இனிபபு வேண்டுமென்று கேள்" என்று பல்லைக் கடித்துக்கொண்டு சொல்கிறார். இது எல்லோர் காதிலும் விழப்போக, உடனே திரையை மூடும்படியாகிவிட்டது. திரையை மூடியவுடன் மந்திரவாதி வேஷத்தில் இருந்த மாணவன் அந்த சிறுவனை துரத்திக் கொண்டு ஓடத் தொடங்கினார்.

ஸ்ரீராமகிருஷ்ணர் கதையில் சித்திகள் கடவுகளைக் காட்டுவதில்லை என்று தெரிந்துகொண்டோம். எங்கள் கதையில் நாம் செய்த சித்து வேலை எங்களையே எல்லோருக்கும் காட்டிக் கொடுத்துவிட்டது இதுதான் வித்தியாசம்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# காசநோயைக் கட்டுப்படுத்த அடுத்தவாரம் முதல் யாழில் "டொட்ஸ்" நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தேசிய காசநோய் தடுப்பு இயக்கப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சந்திரா சருக்காளி நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வருகை தந்தார்.

இலங்கை தேசிய காசநோய் தடுப்பு இயக்கத்தைச் சேர்ந்த வைத்திய கலாநிதி கிம்புலான, வைத்திய கலாநிதி ரட்ணசிறி ஆகியோர் கடந்த 3ஆம் திகதி யாழப்பாணம் வருகை தந்தனர். உலகளாவிய ரீதியில காசநோயைக் கட்டுப்படுத்துவதற்கு 185நாடுகள், டொட்ஸ் என்ற நிகழ்ச்சித் திட்டத்தை அமுலாக்கியுளளன. அவ்வகையில் இலங்கையிலும் 21 இடங்களில் டொட்ஸ் என்ற நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

தற்போது 22ஆவது இடமாக யாழ்ப்பாணத்திலும் டொட்ஸ் என்ற நிகழ்ச்சித்திட்டம் அடுத்த வாரத்தில் இருந்து அமுலாக்கப்படவுள்ளது.

இவ் "டொட்ஸ்" என்ற காசநோய் தடுப்பு நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக விளக்கமளிப்பதற்காகவே மேற்குறிப்பிட்ட வைத்தியர் குழு யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ளது.

நேற்று முன்தினம் யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல வைததியர்களுக்கும், வைத்திய பதிவு அதிகாரிகளுக்கும் டொட்ஸ் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான பயிற்சி இலங்கை தேசிய காசநோய் தடுப்பு இயக்கப் பணிப்பாளர் டாக்டர் சந்திரா சருக்காளியால் வழங்கப்பட்டது.

இதேபோன்று கடந்த மூன்று நாட்களாக இவ் டொட்ஸ் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக அனைத்து பொதுச் சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கும், குடும்ப நல வைத்தியர்களுக்கும், மருந்தாளர்களுக்கும், மருந்து கலவையாளர்களுக்கும பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது.

தற்போது யாழ்.மாவட்டத்தில் காசநோய் வைத்திய அதிகாரியாக வைத்திய கலாநிதி சி.யமுனானந்தா நியமிக்கப்பட்டுள்ளார். இவரூடாகவே இவ் டொட்ஸ் நிகழ்ச்சித்திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

மேலும், பண்ணையில் அதாவது முன்பு காசநோய் தடுப்பு நிலையம் இருந்த இடத்தில் தற்போது உலக வங்கியின் நிதியுதவியுடன் 18.7 மில்லியன் ரூபா செலவில் காசநோய் தடுப்பு நிலையம் அமைக்கப்பட்டு வருவதாகவும் இவ் நிலையம் இரண்டு மாதங்களில் திறக்கப்படவுள்ளதாகவும் மாகாண சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மாலை சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் பணிமனையில் நடந்த பத்திரிகையாளர் சந்திப்பின்போதே இத்தகவல் தெரிவிக்கப்பட்டது. (ற-19)

## வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

# எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்க்க சட்ட அதிகாரம் கொண்ட தனியான பிரிவு

(கொழும்பு)

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சட்ட அதிகாரம் உள்ள பிரிவொன்றை ஏற்படுத்தும் யோசனையொன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் ஆர்.எம்.காமினி ரத்நாயக்க இதுகுறித்த பிரேரணையொன்றை முன்வைத்துள்ளார்.

வெளிநாடுகளில் வேலைசெய்வோர் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல் சம்பவங்கள்,ஆட்கடத்தல், பாலியல் துன்புறுத்தல் என்பன தொடர்பாக இந்தப் பிரிவு விசாரணை நடத்தமுடியுமென அவர் அந்த யோசனையில தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளில் இருக்கும்போது இடம்பெறும் நிதிமோசடி, வெளிநாடுகளில் நிர்க்கதிக்குள்ளானோரை மீணடும் நாட்டிற்கு அழைத்து வருவது அவர்களின் பாதுகாப்புத் தொடர்பான நடவடிக்கைகள் தொடர்பில் அந்தப்பிரிவு செயற்பட அதிகாரம் வழஙகபடவேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.(ற-9)

# நெருப்புக்காய்ச்சலை முற்றாகக் கட்டுப்படுத்த விசேட தடுப்புத்திட்டம் ஆரம்பிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டததில் விசர்நாய்கடி, நெருப்புக் காய்ச்சல் போன்ற நோய்களில் இருந்து மக்கள முற்றாக விடுபடுவதற்கு எதிர்காலத்தில் விசேட தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் மேறகொள்ளப்படவிருப்பதாக சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிமனையில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அண்மைக்காலங்களில் யாழ்.மாவட்டத்தில் நுளம்பினால் பரவி வந்த மலேரியா நோய் தற்போது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மலேரியா நுளம்பினைத்தேடி அழிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், இன்னொருபுறம் மலேரியா நோயாளிகளை இனங்கண்டு அவர்களைக் குணமடையச் செய்ததன் மூலமாகவே மலேரியா நோயைக் கட்டுப்படுத்த முடிந்ததாக அவர் தெரிவித்தார்.

இதேபோன்றுதான், காசநோயுடையவர்களையும் இனம்கண்டு அவர்களை குணமடையச்செய்வதன் மூலமே யாழ்.மாவட்டத்தில் காசநோயை முழுமையாகக் கட்டுபபடுத்த முடியும் என்பதுடன், காசநோய் மற்றவர்களுக்குப் பரவுவதையும் தடுக்கமுடியும் எனவும் தெரிவித்தார்.

யாழ.மாவட்டத்தில் காசநோய் தொடர்பாக மக்கள மத்தியில் தவறான அபிப்பிராயம் காணப்பட்டு வருகிறது.

யாழ்.மாவட்டத்தில் காசநோய் ஏற்பட்டவர்களை சமூகத்தில் இருந்து தனியாக ஒதுக்கிவைக்கும் தவறானநிலை காணப்படுகிறது.

முன்னைய காலச்சிகிச்சை முறைகளில் தான் இந்நோயுடையவர்களை தனியாக ஒதுக்கிவைத்து சிகிச்சையளிககப்பட்டு வந்தது. ஆனால் நவீன சிகிச்சை முறையில் காச நோயுடையவாகளை இனஙகண்டு அவர்கள் சமூகத்தில் இருந்து தமது வேலைகளை மேற்கொள்ளககூடிய வகையிலே சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-19)

## பண்ணையில் அமைக்கப்பட்டுவரும்

# காசநோய் தடுப்பு நிலையம் இரு மாதங்களில் திறக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டததில் காசநோயினால் 2004ஆம் ஆண்டு 241பேர் பீடிக்கப்பட்டுள்ளதுடன், இவ்வாண்டில் கடந்த 4 மாதங்களில் 75பேர் பீடிக்கப்பட்டுள்ளதாகவும் யாழ். மாவட்ட காசநோய் வைத்திய அதிகாரி சி.யமுனானந்தா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை சுகாதாரசேவைகள் மாகாணப் பிரதிப்பணிப்பாளர் பணிமனையில் நடைபெற்ற பத்திாிகையாளர் சந்திப்பின் போதே இத் தகவல் வெளியிடப்பட்டது. இச் சந்திப்பில் சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப்பணிப்பாளர் வைதத்திய கலாநிதி கேதிஸ்வரன் மேலும் தெரிவிக்கையில்,

ஏற்கனவே பண்ணையில் (துரையப்பா விளையாட்டரங்கிற்கு அருகாமையில்) காசநோய் தடுப்பு நிலையம் இருந்த இடத்தில் தற்போது உலகவங்கியின் நிதியுதவியின் கீழ் 18.7 மில்லியன் செலவில் காசநோய் தடுப்புநிலையம் கட்டப்பட்டுவருகிறது.

இக் காசநோய்த் தடுப்புநிலையம் இன்னும் இரண்டு மாதங்களுக்குள் திறக்கப்படும். அத்துடன், இவ் காசநோய் தடுப்பு நிலையத்திற்கு அருகாமையில் காசநோய் விடுதி ஒன்றும் அமைப்பதற்குத் தீமானிக்கப்பட்டுள்ளது என்றார். (ற-19)

## வருடாந்த மஹோற்சவம்

(பொன்னாலை)

அளவெட்டி-கும்பிளாவளைப்பிள்ளையார் கோயில் வருடாந்த மஹோறசவம் எதிர்வரும் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப.10.00மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் உற்சவம் இடம் பெறும்.

எதிாவரும் 22ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 23ஆம் திகதி தர்த்தத் திருவிழாவும், மறுநாள் பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (ற-49)

# காசநோய்

உலக சுகாதார நிறுவனத்தின் அனுசரணையுடன் காசநோயாளருக்கு நேரடிக் கண்காணிப்பின் கீழான சிகிச்சை தற்போது யாழ்ப்பாணத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் கீழ் வைத்தியசாலையில் நோயாளர்கள் அனுமதிக்க வேண்டிய அவசியமில்லை. நோயாளிகள் சுகாதார சேவை உத்தியோகத்தரின் நேரடிக் கண்காணிப்பில் தினமும் இரண்டு மருந்தினை உட்கொள்வார். பின் நான்கு மாதங்களுக்கு இரண்டு மருந்துகளை உட்கொள்வார். மேலும் இந் நான்கு மருந்துகளும் சேர்ந்த தனி மருந்துகளும் தற்போது பாவனையில் வந்துள்ளன. இவற்றை கிரமமாக உட்கொள்வதால் நோய் முற்றாகக் குணமடைந்துவிடும்.

## காசநோயாளர்கள் கவனிக்க வேண்டியவை

குறுகியகால நேரடி அவதானிப்புதுகளாக நான்கு வகையான மருந்துகள் முதன்மை பெற்று விளங்குகின்றன. உழைச்செல வான் எனும் நோயாளியைக் கண்காணிப்பவர்களாக மருந்துகளைத் தினமும் வழங்கும் சுகாதார சேவையாளர்கள் விளங்குவார்கள். இருபது வருட ஆராய்ச்சியில் உலக சுகாதார நிறுவனம் விதந்துரைத்ததை இற்றைக்கு இரண்டாயிரம் வருடங்களிற்கு முன்பே திருவள்ளுவர் ஒரு குறளில் விள்க்கியுள்ளமை தமிழைப் பெருமை கொள்ள வைக்கின்றது. ஆனால் அதைத் தற்போது கடைப்பிடிப்பது எமது கடமையாகும்.

காசநோய் பக்ரீறியாவினால் ஏற்படும் தொற்றும் நோயாகும். இது உடலின் எப்பாகத்தையும் தாக்கலாம். ஆனால் பொதுவாக சுவாசப் பையையே தாக்கும். இது நுரையீரல் காசநோய் என அழைக்கப்படுகின்றது. நுரையீரல் தவிர நிணநீர்க்கணு. முள்ளந்தண்டு. மூளை மென்சவ்வு என்பவற்றிலும் காசநோய் ஏற்படலாம்.

**காசநோய் பக்ரீறியாவால் ஏற்படும் தொற்று நோயாகும். இது உடலின் எப்பாகத்தையும் தாக்கலாம். நுரையீரல் தவிர நிணநீர்க்கணு, முள்ளந்தண்டு, மூளை மென்சவ்வு என்பவற்றிலும் காசநோய் ஏற்படலாம்.**

சிகிச்சை முறையில் அடையாளம் காணப்படும் சகல காசநோயாளர்களும் தமது வதிவிடங்களிற்கு மிக அருகில் உள்ள சுகாதார நிலையத்திற்கு சிகிச்சை விபர அட்டை மருந்துகளுடன் அனுப்பப்படுவர்.

நோயாளிக்கு அளிக்க வேண்டிய மருந்துவகைகள். மாத்திரை அளவு என்பன சிகிச்சை அட்டையில் குறிக்கப்பட்டிருக்கும் மருந்து உள்ளடக்கியுள்ள பாத்திரத்தில் நோயாளியின் பெயர் குறிக்கப்பட்டிருக்கும். நோயாளி தினமும் சிகிச்சை நிலையத்திற்கு வந்து சுகாதார உத்தியோகத்தர் முன்னிலையில் மருந்தினை உட்கொள்வார். நோயாளி மருந்தினை உட்கொண்டதும் அவரது சிகிச்சை அட்டையில் அடையாளம் இடப்படும்.

ஒரு நாளாவது மருந்து உட்கொள்ள வருகை தராவிடத்து அவரை வரவழைக்க உடன் முயற்சி எடுக்கப்படும். இத்தருணத்தில் திருக்குறளில் பொருட்பாலில் வள்ளுவர் கூறிய "உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வான் என்று அப்பால் நாற்கூற்றே மருந்து" வாசகம் ஞாபகத்தில் வருகிறது.

அதாவது நோயுற்றவன் நோய் தீர்க்கும் மருந்துவன். நோயைப் போக்கவல்ல மருந்து நோயாளியை கண்காணிப்பவன் என்பனவையே சிகிச்சையில் அடங்குகின்றன.

## சோதனை

காசநோய் தொற்றியவர்கள் நோய் அறிகுறிகள் காணப்படின் உடனடியாக சளிப் பரிசோதனை செய்வதற்காக யாழ்.மார்பு நோய் சிகிச்சை நிலையத்தை அல்லது அருகில் உள்ள வைத்தியசாலையை நாட வேண்டும்.

காசநோய் தீர்க்கும் மருத்துவராக மாவட்ட காசநோய்த் தடுப்பு அதிகாரி விளங்குவார். நோயைப் போக்கவல்ல மருந்துகளை...

## நோய்த்தொற்றுக்கான காரணி

இந் நோய்க்கிருமிகள் காற்றின் மூலமே தொற்றுகின்றது. காற்றோட்டம் குறைந்த இடங்களில் வாழ்ந்தால் நோய்த் தொற்றல் அதிகம் ஏற்படும். சூரிய ஒளி நோய்க் கிருமிகளை அழிக்கும். எனவே நன்கு சூரியவெளிச்சம் படுமாயின் நோய்க் கிருமிகள் அழிந்துவிடும். நோயாளிகள் இருமும் போதும். தும்மும் போதும் நோய்க்கிருமிகள் சளி. எச்சில் துணிககைகளுடன் சுவாசப்பையில் இருந்து வெளியேறிக் காற்றில் கலக்கின்றன. சுகதேகி ஒருவர் சுவாசிக்கும் போது இந்த நுண்கிருமி உள்ள காற்று உள்ளெடுக்கப்படுமானால் அவை சுவாசத் தொகுதியினூடே உட்செல்கின்றன.

இந் நோய்க் கிருமிகள் உட்சென்றாலும் அனைவரும் நோயாளிகள் ஆகமாட்டார்கள். ஒருவரது நோய் எதிர்ப்புத் தன்மையிலும் உட்சென்ற நோய்க்கிருமிகளின் எண்ணிக்கையிலுமே நோய் உருவாகும் தன்மை தங்கியுள்ளது.

நோய் எதிர்ப்புச் சக்தி பலமானதாக இருக்கும் போது ஒருவரில் நோய் அறிகுறிகள் தோன்றாமல் அவர் தொற்று ஏற்பட்ட நிலையில் வாழ்வார். அவரிடம் இருந்து மற்றவர்களுக்கு நோய்த் தொற்று ஏற்படாது. ஆனால் நோய் எதிர்ப்புச் சக்தி குறைவாக உள்ள போது நோய்க்கிருமியை அழிக்க உடற்கலங்களால் முடியாது போகும். ஆனால் நோய்க்கிருமிகள் பல்கிப்பெருகி சுவாசச் சிற்றறை மென்சவ்வுகளைச் சிதைத்து நோய் நிலையை உருவாக்கும்.

நோய் எதிர்ப்புச் சக்தி குறைவடையும் சந்தர்ப்பங்களாக போசாக்குக் குறைபாடு. முதுமை அடைதல். அதிக மதுபானம் பாவித்தல். நீரிழிவு நோய் நிலை புற்றுநோய் வேறு. பக்ரீறியா. வைரஸ் தொற்றுக்கள் பிரிட்னிசலோன் போன்ற கட்டுப்பாடு இல்லாத பாவனை எயிட்ஸ் நோய் என்பன காணப்படுகின்றன. இத்தகையவர்களில் காசநோய்க் கிருமிகள் உட்சென்றதும் தொற்றுள்ள நிலையிலிருந்து நோய் நிலைக்கு மாற்றப்படுவர்.

**நோய்க்கிருமி வேறொருவரின் உடலில் உட்சென்றாலும் அவரின் நோய் எதிர்ப்புத் தன்மையிலும், உட்சென்ற நோய்க் கிருமிகளின் எண்ணிக்கையிலுமே நோய் உருவாகும் தன்மை தங்கியுள்ளது.**

## நோய்க்கான அறிகுறிகள்

காசநோயின் அறிகுறிகளாக மூன்று வாரங்களிற்கு மேலான தொடர்ச்சியான இருமல் காணப்படும். சளியுடன் இரத்தம் வெளியேறும். மார்பில் நோக் காணப்படும். சுவாசிப்பதால் சிரமம் ஏற்படும். எளிதில் களைப்படைவார். உணவில் நாட்டமின்மை காணப்படும். மாலை நேரங்களில் மெல்லிய காய்ச்சல் காணப்படும். இரவு நேரத்தில் அதிகம் வியர்த்தல் ஏற்படும். அதிக சோர்வு காணப்படும்.

இந் நோய்க்குரிய அறிகுறிகள் ஒன்றோ அல்லது சிலவோ காணப்படும். உடனடியாகச் சிகிச்சை எடுப்பதால் பு,ரணமாகக் குணமடையலாம். ஆனால் மருந்துகள் எடுக்காவிடின் என்புகள் தோலுடன் போட்டியிட்டு தங்கள் இருப்பை வெளிக்காட்ட முனையும். இவை சிலவேளைகளில் உயிர்வாழும் ஆவிகள் எனத் தோற்றமளிக்கும்.

**டாக்டர் சி.யமுனானந்தா**
யாழ்.மாவட்ட காசநோய் வைத்திய அதிகாரி

## சிகிச்சை

காசநோய் அறிகுறிகள் தென்பட்டால் யாழ்ப்பாண மார்பு நோய் சிகிச்சை நிலையத்தில் சளிப் பரிசோதனை செய்து ஆலோசனையைப் பெறலாம். சளிப் பரிசோதனையே சிறந்ததும் நம்பிக்கையானதும் விரைவானதுமான மலிவானதுமான சோதனையாகும். மூன்று சளி மாதிரிகள் பரிசோதிக்கப்படும். காசநோய்க்கு பு,ரண சிகிச்சை அளிக்க சரியான மருந்துகள் உரிய அளவு தினமும் சரியான காலத்திற்கு எடுக்க வேண்டும்.காசநோய் ஏற்கனவே வந்து சிகிச்சை பெற்றவர்களுக்கு மீளவும் வந்தால் அல்லது மருந்துகளை ஒழுங்காக எடுக்காவிடின் முதல் இரு மாதங்களிற்கும் நான்கு மருந்துகளுடன் "ஸ்ரெப்ரோமைசீன" ஊசியும் தினமும் அளிக்க வேண்டும். பின் நான்கு மருந்துகள் ஒரு மாதத்திற்கும் பின் மூன்று மருந்துகள் ஐந்து மாதங்களிற்கும் அளிக்கப்படும்.

**3 வாரங்களுக்கு மேலான தொடர்ச்சியான இருமல், சளியுடன் இரத்தம் வெளியேறல், மார்பில் நோ, சுவாசிப்பதில் சிரமம், எளிதில் களைப்பு, உணவில் நாட்டமின்மை, மாலையில் மெல்லிய காய்ச்சல், இரவில் அதிக வியர்வை, அதிக சோர்வு... இவற்றில் ஒன்றோ சிலவோ காசநோய்க்கான அறிகுறிகள்.**

(தொடரும்)

# ஐ.நா.உயர் அதிகாரி இலங்கை வருகை

(கொழும்பு)

ஐ.நா.சபையின் பெண்கள் அபிவிருத்திப் பிரிவின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி நொயிலின் ஹைசர் நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டு எதிர்வரும் 11 ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளார்.

இலங்கை வரும் அவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரைச் சந்தித்துப் பேசவுள்ளார்.

14 ஆம் திகதி வரை இங்கு தங்கியிருக்கும் அவர், சுனாமியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் ஐ.நா. அமைப்பினால் பெண்கள் தொடர்பில் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்களில் பங்கு கொண்டுள்ள அரச சார்பற்ற மற்றும் அரசு சார்பான அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

அத்துடன், இது தொடர்பாக மேற்கொள்ளப்படும் திட்டங்களையும் பார்வையிடும் இவர், எதிர்வரும் 13 ஆம் திகதியன்று இடம்பெறும் திட்ட ஆலோசகர் கூட்டத்திலும் பங்கு கொள்வார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ந-2)

# தொ.நு.கல்லூரிக்கு அடிக்கல் நாட்டல்

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பகுதியில் தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு வைபவம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந் நிகழ்வில் தமிழீழ விடுதலைப்புலிகளின் திட்டமிடல் பிரிவைச் சேர்ந்த ரஞ்சன், வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் பொறுப்பாளர் நிலவன் ஆகியோர் உட்பட மற்றும் பலரும் கலந்துகொண்டனர். (ந-43)

# செயலமர்வு

(கோப்பாய்)

யாழ்.வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் தரம் ஒன்று, தரம் இரண்டில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயற்பாடு சார் வாய்மொழி ஆங்கிலம் சம்பந்தமான முதலாம் கட்ட செயலமர்வு எதிர்வரும் 7,8,9 ஆம் திகதிகளில் இந்து மகளிர் கல்லூரியில் அமைந்துள்ள ஆசிரியர் நிலையத்தில் நடைபெறவுள்ளது. தெரிவுசெய்யப்பட்ட பாடசாலை ஆசிரியர்கள் இச் செயலமர்வில் கலந்துகொள்ளவுள்ளனர். (ந-79)

# வீதிகள் புனரமைப்பு

(பொன்னாலை)

நீண்டகாலமாகத் திருத்தப்படாமல் இருந்த சங்கானை பாணாவெட்டி வீதி, பழைய தபால்கந்தோர் வீதி, அந்திரானி 2 ஆம் வீதி, சீக்காய் வயல் வீதி, மூளாய் 2ஆம் வீதி, கலட்டி வீதி, சங்கானை ஓடக்கரை வீதி ஆகியன "நிக்கொட்" நிதியுதவித் திட்டத்தின் கீழ் தற்போது வலிகாமம் மேற்கு பிரதேச சபையினால் புனரமைக்கப்பட்டு வருகின்றன. (ந-7,49)

# நியமனம்

(அம்பன்)

வடமராட்சி வலயக் கல்விப் பணிமனையில் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றிய ஏ.ஏ.நடராசா கடந்த மாதம் 27ஆம் திகதியிலிருந்து பருத்தித்துறை நகரசபையின் நிர்வாக உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டுள்ளார். (க-56)

# தமிழ்த்தினப் போட்டி

கோப்பாய் கோட்ட பாடசாலைகளுக்கிடையேயான தமிழ்த்தினப் போட்டி நிகழ்வுகள் எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் 14,15 ஆம் திகதிகளிலும் நடைபெறவுள்ளதாக கோப்பாய்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ந-79)

# இலவச மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

உலக செஞ்சிலுவை தினத்தை முன்னிட்டு இன்று சனிக்கிழமை 9.00 மணியிலிருந்து 1.00 மணி வரை இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்ட கிளையினால் நாயன்மார்க்கட்டு பாரதி சனசமூக நிலையத்தில் மாபெரும் இலவச மருத்துவ முகாம் நடாத்தப்படவுள்ளது. இதில் மருந்து வழங்கலும், கண் பரிசோதித்து கண்ணாடி வழங்கலும் இடம்பெறவுள்ளன. (ந-9)

# வீதிகளுக்கு மின்குமிழ்

நீண்டகாலமாக மின்குமிழ்கள் பொருத்தப்படாத காரைநகரின் பிரதான வீதிகளுக்கு மின்குமிழ்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இலண்டனில் வாழும் காரைநகர் வாசிகளால் வழங்கப்பட்ட நிதி மின்சார சபையிடம் கையளிக்கப்பட்டு அவர்களின் உதவியுடன் இந்த மின்குமிழ்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இதுவரை காலமும் இவ் வீதிகளில் அதிகாலை வேளைகளில் பஸ்ஸ"க்காகக் காத்திருப்போர் இருட்டிலேயே நிற்கவேண்டிய நிலை இருந்தமையும் இதனால் பல அசௌகரியங்களை எதிர்நோக்கியமையும் குறிப்பிடத்தக்கது. (ந-49)

# யாழ். குடாநாட்டு வீதிகளில் மோ.சைக்கிள்கள் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மோட்டார் சைக்கிள் விபத்துக்கள் முன்னெப்போதும் இல்லாத வகையில அதிகரித்துக் காணப்படுகின்றது.

இத்தகைய வீதி விபத்துக்கள் காரணமாக பலர் பாதிக்கப்படுவதுடன், புத்தம் புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள்களும் சேதமடைகின்றன.

தற்போதைய சூழ்நிலையில் குடாநாட்டு வீதிகளில் மோட்டார் சைக்கிள்கள் பாவிப்பவர்களின் தொகை என்றுமில்லாதவாறு அதிகரித்துக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

சாரதி அனுமதிப்பத்திரம் பெறாத இளம் வயதினர் மோட்டார் சைக்கிள்களில், வீதிப் போக்குவரத்து முறைகளைக் கைக்கொள்ளாது தம்மிஷ்டத்தில் வீதிகளில் அதி உச்ச வேகத்தில் சைக்கிள்களைச் செலுத்துகின்றனர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் வீதிகளில் போக்குவரத்துப் பொலிஸார் போக்குவரத்துக் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டிருக்கின்ற போதிலும் கூட, மோட்டார் சைக்கிள் விபத்துக்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (ந-16)

# பொதுச்சபைக் கூட்டம்

(பொன்னாலை)

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளன.

இக் கூட்டங்கள் கிளை ரீதியாக பின்வரும் இடங்களில இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

புலோலி கிழக்கு கிளை 02க்கு மொடோன் கல்வி நிலையத்திலும், சவனாய்க் கிளை 05க்கு ஞானசம்பந்தர் கலாமன்ற நிலையத்திலும், வல்வை கிளை 13க்கு வல்வை அ.மி.த.க. பாடசாலையிலும், நெல்லண்டைக் கிளை 23க்கு நெல்லண்டைப் பாலர் பாடசாலையிலும், தொண்டமனாறு கிளை 14க்கு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்திலும் கூட்டங்கள் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-49)

# சிறுவர் அரங்கம்



## பொது அறிவு

1.மிக வெப்பமுடைய கோள் - வெள்ளி.

2.பூமியைப் போல் காற்று மண்டலம் உடைய கோள் - செவ்வாய்.

3.சந்திரனில் மனிதன் இறங்குவதற்கு பயன்படுத்திய முதல் விண்கலம் - அப்பலோ 11.

4.முதல் விண்வெளி யாத்திரிகன் - யூறி ககாறின் (ரஷ்யா).

5.சூரிய குடும்பத்தின் மிகப்பெரிய கோள் - வியாழன்.

6.மிகச் சிறந்த ஒளியுடைய கோள் - வெள்ளி.

7.மிகக் கூடுதலான துணைக்கோள்கள் உள்ள கோள் - வியாழன்.

8.மிக அடர்த்தியான கோள் - சனி.

9.மிகச்சிறிய கோள் - புதன்.

## அழையா விருந்தாளிகள்!



வவ்வால்கள் மற்ற மிருகங்களின் பொந்துகளில் வசிக்கின்றன.

மேற்கு ஆபிரிக்காவின் மத்திய பகுதியில் காணப்படும் ரோமம் நிறைந்த வவ்வால்கள் மரங்களில் சிலந்திகள் கட்டும் கூடுகளில் வசிக்கும்.

ஆசியாவில் காணப்படும் வவ்வால்களின் மண்டை தட்டையாக இருப்பதால் செங்குத்தாக மூங்கில் மரங்களில் ஏறமுடிகிறது. அதன் விரல்கள் பளளங்களில் பதியுமாறு இருப்பதால் அதனால் செங்குத்தாக ஏற முடிகிறது.

இலை போன்ற மூக்குடைய வவ்வால்கள் ஆபிரிக்காவில் காணப்படும் முள்ளம்பன்றியின் பொந்துகளில் வாழ்கின்றன.

ஆபிரிக்காவில் காணப்படும் இவை பெரிய முகம் கொண்டதாக காணப்படுகிறது. இவை நிலத்தில் காணப்படும் பொந்துகளில் வாழ்கின்றன.

அமெரிக்காவில் உள்ள சோனோரன் பாலைவனத்தில் பழுப்ப நிற வவ்வால்கள் மரம்கொத்திப் பறவைகள் விட்டுச்சென்ற பொந்துகளில் வாழ்கின்றன.

## மனிதர்களை நம்ப முடியாது!



ஆற்றங்கரையொன்றில் ஒருநாள் ஒலிபெருக்கி அலறியது. முதலை பராமரிப்புத் திட்டத்தை தொடக்கி வைத்து அமைச்சர் ஒருவர் உரையாற்றினார்.

"முதலைகள் அருகிவிட்டன. அவற்றை அழியாது பாதுகாக்க முடிவுசெய்துள்ளோம். எமது பாராளுமன்றத்தைச் சூழவுள்ள ஏரியில் முதலைகளைப் பெருக வைத்தால் மட்டுமே மக்கள் பிரதிநிதிகளின் பாதுகாப்பை உறுதி செய்யலாம்" என்று பேசினார்.

முதலை பராமரிப்பு அதிகாரசபையின தலைவர் அமைச்சரைத் தொடர்ந்து உரையாற்றினார்.

"முதலைகளுக்கு உணவூட்டுவதற்காக முதலில் முயல்களையும் ஆடுகள், மான்கள் போன்றவற்றை வளர்க்கத் திட்டமிட்டுள்ளோம். அவை சுமார் 6 மாதங்களாகியவுடன் நல்ல வளர்ச்சியடைந்து விடும். அப்போது அவற்றை ஏரியிலும் இந்த ஆற்றிலுமுள்ள முதலைகளுக்கு உண்ண வழங்குவோம். முதலைகளை ஆரோக்கியமாக வளர்ப்பதற்கு இதுவே நல்லமுறை" என்று கூறினார். கைதட்டல்கள் அமர்க்களமாக இருந்தன.

இவர்களின் உரைகளைக் கேட்டுக்கொண்டிருந்த அந்த ஆற்றின் முதலைகள், யாவும் மகிழ்ச்சியால் உள்ளம் மலர்ந்தன. அவைகள் தமக்குள் கூடி ஆறு மாதங்களின் பின் தமது உணவுப் பஞ்சம் தீர்ந்துவிடும் என்று கூறி ஆறுதலடைந்தன. ஆறு மாதங்களாகியது இரும்புக்கம்பி வலையினுள் அடைந்து வளர்க்கப்பட்ட நூற்றுக்கணக்கான விலங்குகளை அதிகாரசபையின் தலைவர் லொறிகளில் ஏற்றிச்சென்று தனது உறவினரின் இறைச்சிக் கடைகளில் போட்டு விற்கத்தொடங்கினார். முதலைகளுக்கு ஏமாற்றமாகிவிட்டது. ஆற்றிலுள்ள முதலைகள் ஒருநாள் ஒன்றுகூடின. அதிகாரசபைத் தலைவர் அந்தப்பக்கம் வரும் வரை காத்திருந்தன.

இவ்வேளையில் ஒருநாள் மீண்டும் ஒரு ஒலிபெருக்கி அலறல் கேட்டது. ஒரு விழாவில் வைத்து ஒவ்வொரு முதலைக்கும் ஒவ்வொரு விலங்கை வழங்கப் போகின்றார்களோ என்ற ஆதங்கத்துடன் முதலைகள் ஆற்றின் கரைகளில் ஏறி பேச்சை உற்றுக்கேட்டன.

அதிகார சபையின் தலைவர் ரோசமாகப் பேசினார். "எமது முயற்சியால்தான் இந்த தேர்தல் வந்திருக்கின்றது. எனது கட்சி வெற்றிபெற்று நான் அமைச்சராக வந்ததும் இந்த முதலைகளை ஒழிபபதற்கு திட்டம் கொண்டுவருவேன். இந்த ஆற்றின் முதலைகள் எமது பண்ணை விலங்குகள் பலவற்றை விழுங்கிவிட்டன. பண்ணை நட்டமடைவதற்கு இதுவே காரணம்" என்றார்.

"முதலில் ஆற்றிலுள்ள முதலைகளை அழிக்காமல் விலங்கு பண்ணையை ஆரம்பித்த அந்த மாற்றுக்கட்சி அமைச்சரை விசாரிக்க ஆணைக்குழு நியமிக்க நடவடிக்கை எடுப்பேன்..." எனக் கூறியதும் மக்கள் கரகோசம் வானைப் பிளந்தது.

முதலைகள் பாடு திண்டாட்டமாகி விட்டது. ஆற்றிலும் உயிர் வாழமுடியாத நிலை வந்துவிட்டது. கூட்டம் கூடி ஆராய்ந்தன முதலைகள். பல விதமான கருத்துப் பரிமாறல்கள் இடம்பெற்றன.

அரசியல்வாதிகளை ஒருபோதும் நம்பக்கூடாது. முதலைகளை வளர்க்கவேண்டுமென்று ஒரு கட்சி புறப்பட்டது. அடுத்த கட்சி எம்மை அழிக்கவேண்டுமென்கின்றது. இந்த முதலை விழுங்கிகளை நாமே விழுங்கி விடலாம் என்று சில முதலைகள் வாதிட்டன. உண்மையில் ஆட்கள்தான் முட்டாள்கள் முதலைகளைப் பாதுகாக்கவேண்டும் என்றவருக்கும் கைதட்டுகிறார்கள். அழிக்க வேண்டும் என்பவருக்கும் தட்டுகிறார்கள். அவர்களை ஒவ்வொருவராக விழுங்கி விடலாம் என்று வேறு சில முதலைகள் கூறின. இறுதியில் ஆதரவாக 1006 வாக்குகளும், எதிராக 1009 வாக்குகளும் பெற்று ஒரு தீர்மானம் நிறைவேறியது. அதாவது படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய கடமைகளை அரசியல்வாதிகளே இப்போது நிறைவேற்றுவதால் அவர்களையே ஆண்டவனாக வழிபடல் வேண்டும். அவர்களின் கருணை பெற்று வாழ்வதே சாலவும் நன்று. கூட்டம் முடிவடைந்தது. முதலைகள் கலைந்து சென்றன.

இப்போது அவை அரசியல்வாதிகளைக் கண்டதும் வணக்கம் செய்கின்றன. தமது முதுகில் ஏற்றி ஆற்றைக் கடக்க உதவுகின்றன.

## கி.மு., கி.பி என்றால் என்ன?

இந்த உலகம் தொடங்கி பலகோடி ஆண்டுகள் ஆகின்றன. இவற்றை எப்படிக் கணக்கிடுவது என்ற கேள்வி எழும்பிய போது உலகம் தழுவிய அளவில் கி.மு., கி.பி என்ற முறையில் கணக்கிட்டனர்.

இந்த முறையில் இயேசு கிறிஸ்துவின் பிறப்பை மையமாகக் கொண்டு ஆண்டுகள் கணக்கிடப்படுகின்றன. அதாவது கிறிஸ்து பிறப்பதற்கு முன் (கி.மு) கிறிஸ்து பிறப்பதற்கு பின் (கி.பி) என்று சொல்லுவோம். 2005 என்பது கிறிஸ்து பிறந்து 2005 ஆண்டுகள் ஆனதைக் குறிக்கும். கி.மு.ஆறாம் நூற்றாண்டு என்பது இயேசு கிறிஸ்து பிறப்பதற்கு அறுநூறு ஆண்டுகள் முற்பட்ட காலத்தைக் குறிக்கிறது.

கி.மு.என்பதில் இறங்கு வரிசையிலும், கி.பி. என்பதில் ஏறுவரிசையிலும் ஆண்டுகள் இருக்கும்.

## மரணப்பள்ளத்தாக்கு (Death Valley)


கலிபோர்னியாவில் 'இன்யோ' (Inyo) என்ற இடத்தில் ஆழமான ஒரு இறக்கம் இருக்கிறது. இது கடல் மட்டத்திலும் பார்க்க 85 மீற்றர்கள் ஆழமானது.

இதுவே மரணப்பள்ளத்தாக்கு ஆகும். ஐக்கிய அமெரிக்காவில் நிகழ்ந்த தங்க வேட்டையின் போது, இந்தப் பள்ளத்தாக்கை கடக்கமுயன்ற நூற்றுக்கணக்கானோர் மரணமடைந்தனர்.

இப்பள்ளத்தாக்கினுள் தேங்கி நிற்கும் நீர் மிகவும் உவரானது. இப்பள்ளத்தாக்கின் மேல் வீதி அமைத்த போது அங்கு ஆயிரக்கணக்கான மிருகங்களின் எலும்புக்கூடுகள் காணப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

## நிறந்தீட்டுங்கள்

அன்புக் குழந்தைகளே! விதம் விதமாக வர்ணம் தீட்ட உங்களுக்கு ஆசைதானே! இதோ இங்கே தரப்பட்டிருக்கும் படத்திற்கு வர்ணம் தீட்டி மகிழுங்கள்.



# கருவில் ஏற்படும் மனபாதிப்பு

(நேற்றைய தொடர்ச்சி...)

அம்மா வீறிட்டு அலறி, நெஞ்சு வலி வந்து கீழே விழுந்துவிட்டாள். அம்மாவை யாரும் கவனிக்கவில்லை. பயமும் திகிலும் அம்மாவை ஆட்டிப் படைத்தன. இந்த உணர்வுகள் எல்லாம் என்னை மிகவும் பாதித்தன. அம்மாவின் வலியும், வேதனையும் என்னைத் தாக்கின. எனக்கு இந்த உலகத்தில் பிறக்கவே பிடிக்கவில்லை.

"எப்போதும் இதே நினைவு என்னை வந்து இப்போதும் வாட்டுகிறது. இந்தத் துயர நினைவுகள் வரும்போது தலைப் பாரமும், நெஞ்சுவலியும், பயமும் ஏற்படுகினறன. யாரைப் பார்த்தாலும் பயம், எங்கே சென்றாலும் பயம், அந்தப் பயம் அதிகமாகும் போது நெஞ்சுவலி என்று பயமே வாழ்க்கையாகிவிட்டது. வாழ்ககையில் பயங்கள் ஏற்படலாம். ஆனால் பயமே வாழ்ககையாகிவிடக்கூடாது. எனக்குப் படிப்பு, திருமணம் எதுவும் வேண்டாம். என் அம்மாவைப் போல நானும் கஷ்டப்பட விரும்பவில்லை'' என்று சொல்லி அழுத செல்வியை அமைதிப்படுத்தி தக்க சிகிச்சை தந்தபின் படிப்படியாக செல்வி குணமடைந்தாள்.

இப்படிப்பட்ட பிரச்சினைகள் விரைவில் தீர்வதில்லை. மிகவும் கடுமையான முயற்சியுடன்தான் குணப்படுத்த முடியும் என்பதே உண்மை. பொறுமையும், திறமையும் இருந்தால் வெற்றி நிச்சயம்.



இத்தகைய கருவில் ஏற்படும் மன பாதிப்பைக் கூட குணப்படுத்தும் அரிய முறை ஹிப்னோதெரபி என்றால் மிகையாகாது.

## மற்றொரு உதாரணம்

லதாவுக்கு வயது நான்கு எதற்குமே அழமாட்டாள். பசித்தாலும் அழவே மாட்டாள். பூச்சி கடித்தாலும அழமாட்டாள். பார்வையில் ஒரு குழந்தைக்கே உரிய சுட்டித்தனம் இருக்காது. எந்த நேரமும் கண்ணை மூடிக்கொண்டு தனியாக உட்கார்ந்திருப்பாள். ஒரு வேளை இது மன வளர்ச்சியற்ற குழந்தையோ **(Mentally retarded child)** என்று எண்ணி சிகிச்சைக்கு அக் குழந்தை செல்லப்பட்டு உளவியல் ஹிப்னாடிச முறையில் ஆராய்ந்த போது உண்மை தெரிந்தது.

லதாவுக்கு பிரச்சினை அவள் ஒன்பது மாதக் கருவாக தாயின் வயிற்றில் இருந்தபோதே ஆரம்பித்துவிட்டது. லதாவின் தாய் உஷாவுக்கு பயந்த மனசு. கணவன் குடித்துவிட்டு வந்து என்ன செய்வானோ என்ற தினசரி திகிலும், பிரசவத்திற்கு அம்மா வீட்டிற்குக் கூட அனுப்பாத அவன் குணமும் பீதியைத் தந்தன. இதை யாரிடம் சொல்லி அழுவது என்று அவள் தனக்குத் தானே சிந்தித்து மாய்ந்து போவாள். இந்தத் தாயின் பயமும் திகிலும் அவள் உடலைப் பாதித்தன. உடலில் உண்டான கருவையும் பாதித்தன. தாயின் மன இயல்புகளைக் குழந்தை அப்படியே பிரதிபலித்தது.

அதனால்தான் கருவுற்றிருக்கும் நேரம ஒரு தாய் மகிழ்ச்சியாக, ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்று சொல்கிறோம். இங்கு லதாவும் அவள் அன்னையைய போல உணர்ச்சிகளை உட்புதைத்து மன அழுத்தமும், மன இறுக்கமும் உள்ள குழந்தையாகப் பிறந்தவள். தாயின் மன பாரம் இங்கு குழந்தையைப் பாதித்தது. தக்க ஹிப்னாடிச் சிகிச்சைக்குப் பின் பாதிப்பும் நீங்கியது,

ஐந்து வயது குமாருக்கு எப்போதும் ஒரு வெறி. எதையாவது உடைப்பது, யாரையாவது அடிப்பது என்பது பழகிப் போன விஷயம் பக்கத்து வீட்டுப் பையனை இரும்புக் கம்பியால் அடித்து மண்டையை உடைத்தபோதுதான், இது சாதாரண பிரச்சினை அல்ல என்று குமார் மனோதத்துவ சிகிச்சைக்காக அழைத்து செல்லப்பட்டான்.

இவனை ஒரு வயதுவரை 'ரிக்ரஷன்' **(regression)** முறையில் கடந்த காலத்திற்குக் கொண்டு போயும் எந்தத் தடயமும் கிடைக்காததால், அதற்கு முந்தைய கருவறைப் பருவத்திற்கு **(womb stage)** கொண்டுபோய் ஆராய்ந்தபோது குமார் சொல்லத் தொடங்கினான்.

"அப்பா அம்மாவை அடிக்காத நாளே கிடையாது. கையில் கிடைத்ததை எடுத்து அடிப்பார். பாட்டியும், அம்மாவுக்கு சூடு வைப்பாள். தலைமுடியைப் பிடித்து இழுத்து அடிப்பாள். அம்மா அழுதுகொண்டே இருப்பாள்'' தன் ஆத்திரத்தையெல்லாம் கோபமாகக் கூட காட்ட முடியவில்லையே என்று குமாரின் அம்மா ஆத்திரங்களை உட்புதைத்தாள். உட்புதைக்கும் உணர்வுகளும் அப்படியே வயிற்றில் கருவாக இருக்கும் குமாரை சென்றடைகின்றன. ஒவ்வொரு நரம்பிலும் ஆத்திரத்தையும், வெறியையும் அவன் பிரதிபலிக்கிறான் என்பது தெரிந்தது. தக்க உளவியல் சிகிச்சை அளித்தபின் குமார் சாதுவாக மாறிவிட்டான்.

கருவிலேயே பிரச்சினை தொடங்கி விடுகிறதா என்று அதிசயப்படுகிறீர்களா? வேண்டாம் அதைவிட அதிசயம் உங்களுக்குக் காத்திருக்கிறது.

அதுதான் முற்பிறவி, பாதிப்பு, கருவாக நீங்கள் இந்த உலகத்திற்கு வருமுன் கடந்த பிறவியில் ஏற்பட்ட பாதிப்பு, நம்ப முடியவில்லையே என்கிறீர்களா?


அமெரிக்க உளவியல் மருத்துவ பல்கலைக்கழகம் பல வருடங்கள் ஆராய்நது முற்பிறவி அச்சங்கள் என்று ஒன்று இருக்கிறது, அது இன்றைய நல்வாழ்வை பாதிக்கிறது. அந்தப் பாதிப்பால்தான் நாம் புதுவகை மனநோய்களுக்கு ஆளாகிறோம் என்று கண்டுபிடித்து நிரூபித்தும் உள்ளது.

கருவில் திருவுடையவர் என்று சொல்லும் வார்த்தை எத்தனை உண்மையானது! அன்று நம் முன்னோர்கள் கர்ப்பிணியாக இருக்கும் பெண் அமைதியாக, மகிழ்ச்சியாக இருக்கவேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை காட்டினாாகள். பயம், சஞ்சலம் எதுவுமின்றி நிம்மதியுடன் அவள் இருந்தால்தான் பிறக்கும் குழந்தை நல்ல குணம் இயல்புகளைக் கொண்டிருக்கும் என்று நம்பினார்கள்.

## விஞ்ஞானமா -மெஞ்ஞானமா?

நம் இதிகாசங்களும், புராணங்களும் இதே கருத்தைத்தான் சித்திரிக்கின்றன. மகாபாரத்தில் பத்மவியூகம் அமைப்பதைப் பற்றி கண்ணன் பேச, கருவிலிருக்கும் அபிமன்யூ அதைக் கற்றான் என்கிறார் வியாசர்.

அதேபோல் ஹிரண்யனின் மனைவி லீலாவதி பிரகலாதனை கருவில் சுமந்திருந்த நேரம் நாரதர் கூறிய நல்ல ஆன்மீகக் கருத்துக்களை அந்த கருவிலிருக்கும் குழந்தை 'ம்' கொட்டி ஆர்வத்துடன் கேட்டுக கொண்டிருக்கிறது. தாயோ தூக்கத்திலிருக்கிறாள். பிற்காலத்தில் அரக்கனுககுப் பிறந்த அந்தக் குழந்தை சிறந்த அறிவும், ஆன்மீக திறனும் கொண்டு விளங்குகிறது.



இப்படி கருவிலிருக்கும் போதே கல்வியை கலைகளைப் பயின்றதை பல மெஞ்ஞானக் கதைகள் கூறுகின்றன. இவை கற்பனை, சாத்தியமில்லாத ஒன்று என்று அதைப் பலர் ஒதுக்கித் தள்ளினர்.

இன்று விஞ்ஞானம் அந்தக் கருத்துக்கள் உணமை என்று நிரூபித்துள்ளது. கருவிலிருக்கும் குழந்தை நல்ல இசையைக் கேட்கும்போது அதன் அறிவுத்திறனும் மற்ற திறமைகளும் மேம்பட்டு விளங்குவதாக ஆஸ்திரேலியா நாட்டில் நடந்த ஆராய்ச்சி முடிவுகள் ஆதாரத்துடன் நிரூபிக்கின்றன.

கருவிலிருக்கும் குழந்தையின் செவிப் புலன் மிகவும் கூர்மையாக இருக்கிறது, அந்தக் குழந்தை இசையை மிகவும் விரும்புகிறது. சிட்னியிலுள்ள றோயல் மருத்துவ மனையில் காபபிணியான அறுபது பெண்களை வைத்து மருத்துவர்கள் ஓர் ஆய்வு நடத்தினர். இந்த தாய்மார்கள் தினமும் நல்ல இசை, பிரசங்கங்கள் முதலியவற்றைக்கேட்க ஏற்பாடு செய்யப்பட்டது.



குழந்தைகள் பிறந்த மூன்று வயதானதும் இந்த குழந்தைகளின் அறிவுத் திறன், இசை ஆர்வம் குண இயல்புகள் முதலிய பரிசோதனை செய்யப்பட்டன.

இதேபோல நல் இசையை, பிரசங்கதை கேட்காத கர்ப்பிணி தாய்மார்களின் குழந்தைகளின் அறிவுத்திறனும் பரிசோதிக்கப்பட்டன.

நல்ல இசையையும், பேச்சுக்களையும் கருவில் இருக்கும்போது கேட்ட குழந்தைகள் அறிவுத்திறனும், இசை ஆர்வத்திலும் குண இயல்புகளிலும் மிக்வும் மேம்படடிருந்தனர். நல்லிசையை கேட்காத குழந்தைகள் மந்த புத்தி உடையவர்களாக, வன்மையான குணம் கொண்டவர்களாக, அறிவுத்திறன் குறைந்தவர்களாக இருப்பது கண்டறியப்பட்டது.

இந்த ஆய்வு முடிவுகள் நமக்கு தெரிவிக்கும் செய்தி என்ன? பிறக்கும் குழந்தை தைரியத்துடன், விவேகத்துடன் புத்திசாலியாக விளங்கவேண்டும் என்று விரும்பும் தாய்மார்கள் அமைதியான சூழ்நிலையில் எப்போதும் இருக்கவேண்டும்.

வீரம், விவேகம், அறிவுத்திறன் வளர்க்கும் புத்தகங்கள் உரக்க காதில் கேட்கும்படி படிக்க வேண்டும். இதைக் கேட்கும் குழந்தை பிற்காலத்தில் அப்படியே உருவாகிறது.

கருவில் கற்கும் கல்வியும் கலை களும்
காலம் தோறும் தொடரும் காவியம்
பிறவிகள் தோறும் பிரியாமல் தொடரும்
அன்னைவரையும் அற்புத ஓவியம்

கல்வியும், கலைகளும் பயில வேண்டிய காலம் மண்ணில பிறந்த பிறகு அல்ல. அதற்கு முன்னரே ஆரம்பமாகிவிடுகிறது. இதனால்தான் அமைதியற்ற குடும்பங்களில் பிறக்கும் குழந்தை மனநோயாளியாகவோ, பயந்த சுபாவமுள்ளவராகவோ உலகில் ஜனிக்கிறது.

இதனால் கருவைச் சுமக்கும் பெண்கள் மகிழ்ச்சியுடன் மன அமைதியுடன் இருப்பது அவசியம்.

தாய்மார்களே! உங்கள் குழந்தையின் தலை எழுத்து குணநலண்கள் ஆகியவை கருவிலிருக்கும்போதே நிச்சயிக்கப்பட்டு விடுகின்றன. அவன் நல்லவனாகப் பிறப்பதும், தலைவனாக உருவாவதும் உங்கள் கையில், உங்கள் குடும்பத்தாரின் கையில் தான் இருக்கிறது.

உங்களுக்காக இல்லாவிட்டாலும், பிறக்கப்போகும் உங்கள் செல்வக் குழந்தைக்காக மன அமைதியுடன் இருக்கப் பழகிக் கொள்ளுங்கள். டென்ஷன் ஏற்படும் சூழ்நிலைகளைத் தவிருங்கள். நீங்கள் சாப்பிடும் உணவை விட உணர்வுகளே உங்கள் உணர்வுகளே மிகவும் முக்கியம்.

உங்கள் குழந்தை உங்களிடமிருந்து உணவை மட்டும் பெறவில்லை. உங்கள் உணர்வுகளையும் சேர்த்தே பெறுகிறது. பிரதிபலிக்கிறது என்பதை எப்போதும் மறந்துவிடாதீர்கள்.

எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான்
மண்ணில் பிறக்கையிலே
அவன் நல்லவனாவதும், தீயவனாவதும்
அன்னை கருவினிலே அன்னை வளர்ப்பினிலே!

□

## மீன்பிடி உபகரணங்கள் வழங்க முன்வருகை

(பொன்னாலை)

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்குப் பிரதேச மீனவர்களுக்கு ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் மீன்பிடிப்படகுகளையும் அதற்கான வெளியிணைப்பு இயந்திரங்கள் மற்றும் வலைகளையும் வழங்க முன்வந்துள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த 100 குடும்பங்களுக்கு இவ்வாறு படகுகளும் அதற்கான வெளியிணைப்பு இயந்திரங்கள் மற்றும் வலைகள் என்பன வழங்கப்படவுள்ளன. (ரு-49)

## வலி — மேற்கில் 3 குளங்கள் புனரமைப்பு

(பொன்னாலை)

நாடு பூராகவும் ஆயிரம் குளங்களைப் புனரமைக்கும் திட்டத்தின்கீழ் வலி-மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் மூன்று குளங்கள் புனரமைக்கப்படவுள்ளன.

சுழிபுரம் நளவராயன்குளம், பனிப்புலம் ஆராட்சி வெட்டைக்குளம், அராலி குமுக்கன் குளம் ஆகிய மூன்றுமே இத் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படவுள்ளன.

இக்குளங்களின் புனரமைப்புக் கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை தொல்புரம் கமலநல சேவை நிலையமும் வலி மேற்குப் பிரதேச செயலக திட்டமிடல் பகுதியும் மேற்கொண்டுள்ளன. (ரு-49)

## சந்திப்பு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் உள்ளக பயிற்சி ஆசிரியர்களுக்கு இன்று நடைபெறவிருந்த சந்திப்பு ஒத்தி வைககப்பட்டுள்ளதாக யாழ். தேசியக் கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி கமலநாதன் அறிவித்துள்ளார்.

இச்சந்திப்புக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரு-9)

## ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

(பொன்னாலை)

எதிர்வரும் 10ஆம் திகதி செவ்வாய் கிழமை காலை 9.30 மணிக்கு வலி காமம மேற்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக கூட்டமும் நண்பகல் 12 மணிக்கு விவசாயக் குழுக்கூட்டமும் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

சம்பந்தப்பட்ட அனைத்து உத்தியோகத்தர்களையும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளையும், தவறாது இதில் கலந்துகொள்ளுமாறு பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் அறிவித்துள்ளார். (ரு-49)

## கூட்டம்

(பொன்னாலை)

எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்தி சங்கப் பொதுக்கூட்டம் கல்லூரி விசாலாட்சி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் சகல பெற்றோரையும் கலந்துகொள்ளுமாறு சங்கத் தலைவர் அதிபர் திருமதி ச.ஜெயராசா கேட்டுள்ளார். (ரு-49)

## பொது அறிவுப் பரீட்சை

(பொன்னாலை)

நல்லூர் பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பொது அறிவுப் பரீட்சை இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு முத்திரைச் சந்தியில் அமைந்துள்ள முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தில் நடைபெறவுள்ளது.

பரீட்சைக்கு அனைத்து ஆசிரியர்களையும் தவறாது சமுகமளிக்கும் படி அறிவிக்கப்பட்டுள்ளது. (ரு-49)

## பயிற்சி நெறி

(பொன்னாலை)

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான இரண்டாம் கட்டப் பயிற்சிநெறி எதிர்வரும் 14ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தில் நடைபெறவிருக்கும் இப் பயிற்சி நெறியில் அனைத்து அசிரியர்களையும் கலந்துகொள்ளுமாறு முன்பள்ளி இணைப்பாளர் கேட்டுள்ளார். (ரு-49)

# 'இரை தேடி அலையும் அவா பிடித்த குள்ளநரிகள்'

## நிச்சாட்டின் கொலை குறித்து சிவராம் வெளியிட்ட கருத்து இது -தமிழ் கார்டியன் பத்திரிகை செய்தி

(கொழும்பு)

சிவராமின் படுகொலையைக் கண்டித்துள்ள தமிழ் கார்டியன் பத்திரிகை, புலிகளின் போராட்டத்திற்கு ஆதரவளித்ததற்காக அவர் கொலைசெய்யப்பட்டார் என அவரின் கொலையை நியாயப்படுத்துபவர்களையும் கண்டித்துள்ளது.

'மாண்டுபோன போராளி' என்ற தலைப்பில் தமிழ் கார்டியனில் வெளியாகியுள்ள செய்தியில்,

இலங்கையில் மிருகத்தனமான அரசியல் கொலைகள் மற்றும், இனப் போராட்டத்தின் கொடூரங்களால் மரத்துப்போனவர்கள் கூட சிவராமின் படுகொலையால் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

இந்த அரசியல், இராணுவ ஆய்வாளர் இலங்கையின் மிகு சிறப்பான ஊடகபுள்ளியாவார். இலங்கையை ஒரு பல்லினங்களும் வாழும் ஜனநாயக நாடாக மாற்றிவிடமுடியும் என்று நம்பி தம்மைத்தாம் ஏமாற்றிக் கொள்பவர்களுக்கு இக் கொலை ஒரு சவாலாக அமைந்துள்ளது.

இங்கு பிரதான கேள்வியாக இருப்பது அரசின் உயர்மட்டத்திலிருந்து இக்கொலைக்கு எவர் அதிகாரம் அளித்தார் என்பது மட்டுமல்ல; ஆனால், நீதிக்கு விரோதமான தராக்கியின் கொலை, கொலைதான் இறுதியானதாக இருக்கப்போவதில்லை. என்றும் பல ஆயிரக்கணக்கான தனிநபர்கள் கொலை செய்யப்பட்டது போலன்றி, கொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் விடயத்திலும் இக்கொலையும் கூட புலன்விசாரணை செய்யப்படாமலோ அல்லது தண்டிக்கப்படாமலோ போகலாம் என்பதை உறுதிசெய்யக் கூடிய அம்சம் அரச இயந்திரத்தில் எங்கே தான் உள்ளது என்பதே பிரதான கேள்வியாக உள்ளது.

தராக்கி ஏன் படுகொலை செய்யப்பட்டார் என்பது வெளிப்படை. அவரின் எழுத்துக்களோ, அவரின் செயற்பாடுகளோ, அவர் குறிவைக்கப்பட காரணமாக இருந்தனவா? அவர் இலங்கையின் அடக்குமுறைச் சட்டங்கள் எதையாவது மீறியிருக்கிறாரா? அவ்வாறாயின அவர் சட்டத்தின்படி, தண்டிக்கப்பட்டிருக்கலாம். ஆனால் அவர் கோபத்தை சம்பாதித்துக் கொண்டது வேறு வழியிலாகும்.

அவருடைய எழுத்துக்களே தமிழ் தேசியப போராட்டத்தை மேம்படுத்த உதவின எனப பலர் சுட்டிக்காட்டுகின்றனர். இவ்வாறு தென்னிலங்கை ஊடகங்களும் படுகொலையை நியாயப்படுத்திக் கொள்கின்றன. இவர் படுகொலை செய்யப்பட்டதற்கு இது போதுமான காரணமா என்பதை அவர்கள் தமக்குத் தாமே கேட்டுக்கொள்ளவேண்டும். இருமொழிகளிலும் பாண்டித்தியம் பெற்ற தராக்கி மிகுந்த வரவேற்புப் பெற்ற ஒரு கட்டுரையாளர். அவரின் எழுத்துக்கள் நிலவிவந்த கருத்துக்களை நிச்சயமாக கேள்விக்குறி முன் நிறுத்தியிருந்தன என்பதே நிஜம்.

அவர் தன் கருத்துக்களை வாசகர்களிடம் திணிக்கவில்லை. அரசியலில் வேறுபட்ட கருத்துள்ளவர்களும் அவின் கட்டுரையை வாசிக்க ஆர்வத்துடன் காத்திருந்தனர்.

90களில் புலிகளுக்கு எதிரான இராணுவத்தின் தாக்குதல்களை சிங்கள ஊடகங்கள் மிகைப்படுத்தி வெளியிட்டுவந்தன. இதனை முறியடிக்கும் வகையில் தராக்கி வலுவான வாதங்களைத் தன் கட்டுரைகள் மூலம் முன்வைத்து வந்தார். இதனால் அவா பரந்தளவு மதிப்பைப் பெற்றுக்கொண்டார். விஷேடமாக தமிழ் நெற்மூலம் மக்களுக்கு வேறொரு விடயத்தையும் எடுத்துக்கூறினார்.

ஊடகத்தின் நம்பகத்தன்மைக்கு நுட்பமான முறையில், செய்திகளை வெளியிடுவது மிக முக்கியம் என்பதை எடுத்து விளக்கினார். அவரின் கொலைபற்றிய எமது உணர்வுகளை 15ஆண்டுகளுக்கு முன்னர் அவரது நெருங்கிய நண்பராக இருந்த றிச்சாட்டி டி. சொய்சா கடத்தப்பட்டது போன்றே, சித்திரவதை செயது கொலைசெய்யப்பட்ட சம்பவத்தின்போது தராக்கியே கூறிய வார்த்தைகள் புலப்படுத்துகின்றன.

'தம்மை வெளிப்படுத்திக்கொள்ள துணிசசலற்றவர்களால் கொடூரமாக கொலை செய்யப்பட்ட என் சக ஊடகவியலாளருக்கு நான் வணக்கம் செலுத்துகிறேன். சிங்கள சிங்கம் பற்றி பெருமை கொண்டிருக்கும் இந்நாட்டில் பாதுகாப்பற்ற தமது இரையைத் தேடி அலையும் அவாப்பிடித்த குள்ளநரிகள் இருக்கின்றன.

றிச்சாட் மட்டுமல்ல, அனேகர் மிருகத்தனமாக படுகொலை செய்யப்பட்டுள்ளனர். யாரை குற்றஞ் சாட்டுவது, எதனைக் குற்றஞ் சுமத்துவது? சிங்கள மக்களின் ஆன்மீக இயல்பையா?... கோழைத்தனத்தின் உச்சநிலையை இந்தப் பயங்கரவாதத்தின் ஊற்றாக இருக்கிறது. எனவே, இது மென்மேலும் பலியாட்களைத் தேடி சித்திரவதை செய்து அழிப்பதற்கு முன்னர் இதனை இல்லாதொழிப் பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்' என்று கூறியிருந்தார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-6)

## விண்ணப்பம் கோரல்

(சாவகச்சேரி)

இலங்கை நில அளவைத் திணைக்களததின் 'அளவையியலும் படமாக்கலும்' நில அளவை நாயகத்தின் உத்தரவுப்பத்திரம் வழங்கலுக்கான வருடாந்தப் பரீட்சைக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

நில அளவை சட்டங்களிற்கமைய ஒரு முறை பரீட்சைக்குத் தோற்றியவர்களே இதற காக விண்ணப்பிக்கலாம்.

இதற்கான எழுத்துப்பரீட்சை எதிர்வரும் ஜூன்மாதம் 25ஆம் திகதி கொழும்பிலும், செயன்முறைப்பரீட்சை ஓகஸ்ட் மாதம் 09ஆம் திகதி தியத்தலாவையிலுள்ள அளவையியல செயன்முறைப் படமாக்கல் நிலையத்திலும் நடைபெறும்.

விண்ணப்பதாரிகள் இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன் கிடைக்கும் வகையில் விண்ணப்பங்களை பதிவுத்தபாலில் நில அளவை அத்தியட்சகர், பரீட்சைக்கிளை அளவையியல் படமாக்கல் நிறுவனம், தியத்தலாவை என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். (ற-21)

## பிரியாவிடை வைபவம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் ஒரு வாரகாலமாக தங்கி முறிவுநெறிவு வைத்தியம் செய்த டாக்டர் நல்லதம்பிக்கு வைத்தியசாலை ஊழியர்களால் கடந்த 3ஆம் திகதி பிரியாவிடை வைபவம் நடாத்தப்பட்டது. (ற-21)

## தவறிவீழ்ந்து படுகாயம்

(சாவகச்சேரி)

மோட்டார் சைக்கிளின் பின் அமர்ந்து சென்றவர் தவறுதலாக வீதியில் வீழ்ந்ததனால் படுகாயங்களிற்குள்ளானார்.

கடந்த வாரம் கிளிநொச்சியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் சாவகச்சேரி வடக்கு அரசடிப் பகுதியைச் சேர்ந்த சி.மங்கையக்கரசி என்பவரே படுகாயமடைந்தவராவார்.

கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர் பின் மேலதிக சிகிச்சைக்காக அம்புலன்சில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். பின் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ற-21)

## உலகசந்தையில் எரிபொருள் விலை குறையும்போது இங்கும்விலை குறைக்கப்படும்

### -பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர்

சர்வதேச சந்தையில் எரிபொருளின் விலையுடன் ஒப்பிடும்போது அதற்குச் சமமாக இலங்கையின் எரிபொருளின் விலையில் மாற்றம் ஏற்படவில்லையென பெற்றொலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஜாலிய மெதகமே தெரிவித்துள்ளார்.

எரிபொருட்களின் விலை அதிகரிப்பு தொடர்பான செய்தியாளர் மாநாடு ஒன்று நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எரிபொருள் விலையை அதிகரிக்காமல் இருப்பதற்கு எமக்குத் திறைசேரியிடமிருந்து நிவாரணம் கிடைக்கவேண்டும்.

கடந்த 2002ஆம் ஆண்டளவில் விசேடமாகப் பெற்றோலையும், மசகு எண்ணெயையும் இறக்குமதி செய்வதற்காக ஒரு பீப்பாய்க்கு 750 டொலரை செலவு செய்துள்ளோம். 2003ஆம் ஆண்டில் தொகை 1140 டொலராக அதிகரித்து 2004ஆம் ஆண்டின் இறுதியில் 2370 டொலராக இது அதிகரித்துள்ளது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் தெளிவாக இந்த விலை அளவுகளை மளாய்வு செய்யவேணடியுள்ளது. இது சர்வதேச சந்தையின் விலையுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்படவேண்டும்

அதேவேளை, உலக சந்தையில் எரிபொருட்களின் விலை குறைவடையும்போது கட்டாயமாக விலை இங்கும் குறைவடையும்.

நிறுவனம் நட்டமடையும் வகையில் கொண்டு செல்லப்படுகின்றது என யாராயினும் கூறுவார்களாயின் அதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அவர் மேலும தெரிவித்தார். (ற-8)

## இளைஞர் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் பிரிவில் செங்கலடி கொம்மாந்துறைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 7.15 மணியளவில் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இவரது சடலம் செங்கலடி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும் சுடப்பட்டவர் யார்?, ஏன் சுடப்பட்டார்?, யாரால் சுடப்பட்டார்? என்பதனை அறிய முடியாது இருப்பதாகவும் நீதிவான் விசாரனையின் பின்பே தகவல்களைப் பெற முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ற-5)

## கிராமங்களின் அபிவிருத்தியில் ச.ச.நிலையங்கள் முன்னின்று பணியாற்றுவது மிகவும் அவசியம்

(சுதுமலை)

சனசமூக நிலையங்கள் கிராமங்களின் அபிவிருத்தியில் முன்னின்று பணியாற்றுவது மிகவும் அவசிய தேவையாகிறது என நல்லூர் பிரதேச சபையின் செயலாளா பொ.வைரமுத்து தெரிவித்தார்.

நல்லூர் பிரதேச சபையின் கீழ் இயங்கும் சனசமூக நிலையங்களில் பிரதேச அபிவிருத்திக் குழுவை தெரிவுசெய்வதற்கான கலந்துரையாடல் ஒன்று தொக்குவில் உப அலுவலக நூலக கேட்போர் கூடத்தில் பிரதேச சபையின் செயலாளர் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இதில் தலைமை வகித்த பிரதேசசபையின் செயலாளர் மேலும் தெரிவித்ததாவது,

எமது பிரதேசத்திற்குட்பட்ட பல சனசமூக நிலையங்களின் செயற்பாடு குறைவாக உள்ளமை மிகுந்த கவலை தருவதாகவுள்ளது. முன்னைய காலங்களில் மிகச்சிறப்பாக பணியாற்றி விருதுகள் பெற்ற சனசமூக நிலையங்கள இன்று செயற்பாடின்றி உள்ளன. அத்துடன் இதுகுறித்து மக்களது முறைபாடுகள் தினமும் அதிகரித்தவண்ணமே உள்ளன.

சிரார்த்த முறையில் ஒரு சனசமூக நிலையம் செயற்பட்டால் அக்கிராமத்தின் பல பிரச்சினைகளை மிக எளிதில் தீர்த்துவைக்கலாம. தீர்க்கமுடியாத பிரச்சினைகளுக்கு எம்மை அணுகித் தீர்க்கலாம ஒழுங்கான நிர்வாக அமைப்பின் மூலம் இளம் விளையாட்டு வீரர்களை உருவாக்கி நல்ல இளைஞர் சமூகத்தின மூலம் பிரச்சினைகளைக் குறைக்க முடியும் என்றார்.

மேலும் கட்டாக்காலி நாய்கள் அதிகரித்து வருவதாகவும், இதனால் கடிக்கு இலக்காவோர் தொகையும், பல்வேறு விபத்துக்களும் வீதிகளில் ஏற்பட்டுவருவதாகவும் இதற்கு சனசமூக நிலையங்கள் தத்தமது பொதுச சுகாதாரப் பரிசோதகர்களுடனும் எமது சபைத் தொழிலாளர்களுடனும் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் தொற்றுநோய்களைக் கட்டுப்படுததுவதிலும் அதிகளவு அக்கறை எடுப்பது மிகவும் அவசியம் எனவும் அவர் வலியுறுத்தினார்.

இக்கலந்துரையாடலில் யாழ்.மாவட்ட உளளூராட்சி பிராந்திய அலுவலக சிரேஷ்ட ஆய்வு உத்தியோகத்தர், உள்ளூராட்சி உதவியாளர் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், கிராம உப அலுவலக பொறுப்பதிகாரிகள் ஆகியோரும் கலந்துகொண்டு பிரதேச அபிவிருத்தி குறித்த கருத்துக்களைத் தெரிவித்தனா. (ற-252)





அண்மையில் யாழ்.இந்துக கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற நல்லூர் பிரதேச செயலகப்பிரிவின் விளையாட்டுப் போட்டி நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலர் திருமதி.எஸ். தெய்வேந்திரம் மங்கள விளக்கேற்றுகிறார். அருகில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட திரு நெல்வேலி தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் சி.என். ஜெனநாதன், யாழ். இந்துக் கல்லூரி பிரதி அதிபர் எல். ஓங்காரமூர்த்தி மற்றும் நல்லூர் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர், திட்டப்பணிப்பாளர் ஆகியோர் நிற்பதனை முதலாவது படத்திலும்,

பிரதம விருந்தினர் வெற்றி பெற்ற அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த எஸ்.நாககேந்திரத்திற்கு வெற்றிக் கேடயத்தை வழங்குகிறார். அருகில் நல்லூர் பிரதேச செயலக விளையட்டு அலுவலர் நிற்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

## பனங்கட்டிக்கான கேள்வி அதிகரிப்பு

(சாவகச்சேரி)

வரணிப் பகுதியில் குறிப்பாக நாவற்காடு, கரம்பைக் குறிச்சி பகுதிகளில் கருப்பணி கருப்பட்டி (பனங்கட்டி) உற்பத்தி ஆரம்பித்துள்ளது.

தற்போது ஒரு போத்தல் கருப்பணி 18 முதல் 20 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது.

இன்றும் இரண்டு மூன்று மாதங்கள் வரை இவ் உற்பத்தி இடம்பெறும். கடந்த வருடம் சுண்ணாம்பு இன்மையால் உற்பத்தி குறைந்தளவே இடம்பெற்றது.

இதேவேளை, கொடிகாமம் சந்தையில் தென்னிலங்கை பயணிகளின் வருகையால் பனம்கட்டிக்கான கேள்வி அதிகரித்துள்ளது. (ற-21)

# சுன்னாகம்
# ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தான
# இரதோற்சவ சிறப்புமலர் - 07-05-2005


## ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி

"சுன்னாகம் ஸ்ரீ பொன்னம்பலவாண சுவாம', சுவர்ணாம்பிகை சமேதராய் இன்று தேரேறி வரும எம்பெருமான், அடியார்களின் அல்லல்களைக் களைந்து இன்னல்களைப் போக்கி துன்பங்களைத் துடைத்து அமைதியும் சுபீட்சமும் பெற்று மகிழ்ச்சியோடிணைந்த மங்கள வாழ்வுபெற அருள் பாலிக்க வேண்டுமென்று உளமார பிரார்த்தித்து நல்லாசிகளை வழங்குகிறோம்.

மஹோற்சவத்தில் இரதோற்சவம் அழித்தலைக் குறிப்பதாகும். ஆகவே கொலை பாதகச் செயல்கள், குற்றச் செயல்கள், வனமுறைகள், தீஞ்செயல்கள் அனைத்தும் அழிந்தொழிய வேண்டும். புஞ்சமா பாதகங்கள் பாரில் இல்லாதொழிய வேண்டும்.

இன்றைய ரத பவனி காணவருகின்ற பக்தர் குழாம், பரமனின் பெருங்கருணைத் திருவருளுக்குப் பாத்திரமாகி வாழ்வில் வளம் பெருகி, நல்வாழ்வு வாழவேண்டுமெனறு ஆசி கூறிப் பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்
இரண்டாவது குரு மஹா சந்நிதானம்,
நல்லை. திருஞானசம்பந்த ஆதீனம்.



## வரலாற்றுச் சிறப்புடைய கதிரமலை

மருதப்புரவீகவள்ளியின் கணவராகிய உக்கிராச சிங்கமன்னனால் அரசாட்சி செய்யப்பட்ட முதல் தமிழ் இராச்சியமான கதிரமலைப் பதியில் வீற்றிருந்து அருள்பாலிப்பவர் ஸ்ரீ சுவர்ணாம்பிகாதேவி சமேத பொன்னம்பலவாண சுவாமி.

தலவிருட்ஷசமாக வில்வம், நெல்லி ஆகியவையும் வாணலிங்க வடிவாக விளங்கும், நாகர வடிவமைப்பில் அவ்வாலயத்தின் விமானமும் பஞ்சதள ராஜகோபுரமும், தேர்வடிவமைப்பில் நவக்கிரகாலயமும், எண்கோண வடிவமைப்பில் அஷ்டலக்ஷமி கோவிலும், பூஜாந்திர வேலைப்பாடுடைய தேரழகும் ஒருங்குசேர அமைந்தது கதிரமலை சிவன் தேவஸ்தானமாகும்.

இவ்வாலயத் திருப்பணிகள் நடைபெற்று இப்போ மஹோற்வசம் நடைபெறும் வேளையில் ஆலய அறங்காவலாகள், அடியார்கள், தொண்டர் சபையினர்கள், உபயகாரர்கள, ஆலய குருமார்கள் எல்லோரது பெரும் முயற்சியாலும் சிறப்புற்றுள்ள இக் கோவிலின் அருள் சிறப்பு மிக உயர்வுடையதாகும்.

*கதிரமலையான் அடி தொழுது வாழ்வோமாக*

மு.செல்வஸ்ரன்,
அதிபர்,
சுன்னாகம்.



தேர்த் திருவுலாக் காட்சி
இன்று (07-05-2005) காலை 10 மணி

## ஆலய வரலாறு

யாழ்ப்பாண இராச்சியங்களில் தலைசிறந்த இராச்சியமாக விளங்கிய கதிரமலை இராச்சியத்தின் மன்னனான உக்கிரமராஜ சிங்கனால் கட்டப்பட்டதே சுன்னாகம் கதிரமலை சிவன் தேவஸ்தானமாகும்.

ஸ்ரீ சர்வேஸ்வரக் குருக்கள் தலைமையில் நிர்வகிக்கப்படும் இவ்வாலயத்தின் பூஜைகள் ஆகம முறைப்படி நடாத்தப்படுகின்றன.

சிறு ஆலயமாக விளங்கிய இவ்வாலயம் இன்று வானுயர உயர்ந்த இராஜ கோபுரத்துடன் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது. இவ்வாலயத்தின் அழகிய சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த சித்திரத் தேர் அழகுக்கு அழகூட்டுவதாக அமைந்துள்ளது. இவ்வாண்டு அறுபத்து மூன்று நாயன்மார்களது சிலைகள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. ஈழத்தில் ஒரு சில ஆலயங்களில் மாத்திரமே சைவம் வளர்த்த நாயன்மார்கள் அறுபத்து மூவரினது சிலைகள் பிதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

மூர்த்தி, தலம், விருட்சம் ஆகிய சிறப்புகளைத் தன்னகத்தே கொண்டுள்ள இவ்வாலயத்தின் சிவனது விமானம் திரிதளங்களையும், அம்பாளது விமானம் துவி தளங்களையும் கொண்டுள்ளது. இவ்வாலயத்தின் தலவிருட்சம் வில்வை.

அஷ்ட லக்ஷமி ஆலயமும், ஒன்பது நவக்கிரகங்களுக்கு ரதமும் அமைக்கப்பட்டிருப்பது இதன் சிறப்புக்கு மற்றுமோர் சிறப்பாகும்.

வினை தீர்க்கும் விநாயகன், மயிலேறும் குமரன், சுவர்ணாம்பிகை பாகர் பொன்னம்பலவர் புடைசூழ லோக மூர்த்தியாம் ஆரோகணித்துவரும் தேர்த்திருவிழாவைக் காணாத கண் என்ன கண்ணோ என்று தான் கூறவேண்டும்.



## பிரதம குருவின் ஆசிச்செய்தி

ஸ்ரீ பொன்னம்பலவாண சுவாமி திருவருள் கைகூட்டி சென்ற 10-04-2005 அன்று ஆலயம் புதுப்பிக்கப்பட்டு வர்ண வேலைகள், கொட்டகை வேலைகள், தேர் வர்ணவேலைப் பணிகள ஆகியவைகள் ப,ர்த்திசெய்யப்பட்டு மஹா கும்பாபிஷேகம் நடைபெற்று 26.04.2005 செவ்வாய் முதல் கொடியேற்ற விழா நடைபெற்று வருகிறது.

பஞ்சகுண்டபக்ஷமகா யாகத்தில் லக்ஷசார்ச்சனையும் லக்ஷ,ஹோமமும் நடைபெற்று பகல் தினமும் மகேஸ்வர ப,சையும் 'மாலை ஒவ்வொரு காட்சி அலங்காரத்துடன் சுவாமி எழுந்தருளி அருள்பாலித்ததும் அடியார்களுக்கு அளப்பரிய சிறப்பாகும்.

இப்பணிகள் சிறப்புற உதவிய அடியார்கள, தொண்டர்கள், நிதிநல்கிய தர்மசீலர்கள், உபயகாரர்கள் அனைவருக்கும் நன்றி கூறி அனைவருக்கும் ஸ்ரீ சுவர்ணாம்பிகை பாகர் பொன்னம்பலவாண சுவாமி திருவருள் கிடைக்கப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கிறோம்.

சுபம்

இறைபணியில் உள்ள
முத்தமிழ் குருமணி,
நா.சர்வேஸ்வரக் குருக்கள்.



## வாழ்த்துச் செய்தி

வரலாற்றுப் புகழ்வாய்ந்த ஆலயங்களில் ஒன்றாக விளங்குவது கதிரமலைச் சிவன் ஆலயம். வரலாற்றுப் புகழ்பெற்ற உக்கிரமாசிங்கன் ஆட்சிபுரிந்த கதிரமலையென்னும் பதியிலே மூர்ததி தல சிறப்புகளுடன் சுவர்ணாம்பிகை சமேத பொன்னம்பலவானேஸ்வரர் அருள்பாலிக கின்றார்.

இவ்வாலயத்தின் தோற்றம் பற்றி சற்று சிந்திப்போம் எனில், இதற்கான ஒரு ஐத'க கதையுண்டு. வில்வமரத்தடியில் பசு ஒன்று சாணி போட்டதாகவும் அதிலிருந்து தான் சிவலிங்கம் தோன்ற'யதாகக் கூறப்பட்டு வருகின்றது.

ஆயினும், கிட்டத்தட்ட 1834களில் முதலியாரால் இவ்வாலயம் கட்டுவிக்கப்பட்டது. மற்றும் 1960களின் பிற்பகுதியில் யோகர் சுவாமிகள் இங்கு வந்தமையும் மகேஸ்வர பூசை நிகழ்த்தியமையும் குறிப்பிடத்தக்கது.


இன்று இவ்வாலயம் சிறப்புடன் விளங்க ஆலய அமைவிடம், கிரிகை முறைகள், சிறப்பு வாய்ந்த குருக்கள்மார்கள், ஊர் மக்களின் பற்று என்பவையே காரணமாகும்.

செல்வி. ந.யோகேஸ்வரி,
சுன்னாகம்.

# விண்ணில் பாய்ந்தது பி.எஸ்.எல்.வி - சி 6 ராக்கெற்

(சென்னை)

ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து கார்டோ சாட் - 1, ஹாம்சாட் என்ற இரு செயற்



கைக் கோள்களுடன் பி.எஸ்.எல்.வி - சி 6 ராக்கெட் நேற்றுமுன்தினம் காலை 10.14 மணிக்கு விண்ணில் ஏவப்பட்டது.

முன்னதாக மோசமான வானிலை காரணமாக ராக்கெட் விண்ணில் செலுத தப்படும் நேரத்தில் சிறிது மாறுதல் செய் யப்பட்டது.

குடியரசுத் தலைவர் ஏ.பி.ஜே அப் துல் கலாம், இந்த ராக்கெட் ஏவப்படு வதை நேரில் பார்வையிட்டார்.

ராக்கெட்டைத் தயாரித்து ஏவுவதற் காக ரூ.400 கோடி செலவில் ஸ்ரீஹரி கோட்டாவில் அமைக்கப்பட்டுள்ள புதிய ஏவுதளத்தை நாட்டுக்கு அர்ப்பணித்தார் அப்துல்கலாம்.

ஒரே ராக்கெட்டில் இரண்டு செயற் கைக கோள்களை வைத்து விண்ணில் ஏவுவது இதுவே முதல் முறையாகும்.

விண்ணில் இருந்து பூமியைப் படம் எடுக்கக்கூடிய இரு காமராக்கள், கார் டோசாட் - 1 செயற்கைக் கோளில் பொருத் தப்பட்டுள்ளன. அமெச்சூர் . ரேடியோவைப்



பயன்படுததுவோருக்கு செயற்கைக்கோள் மூலம் இணைப்புத் தருவதற்காக ஹாம் சாட் செயற்கைக்கோள் பயன்படும். (ற)

## 20 தீவிரவாதிகள் சுட்டுக்கொலை

காஷ்மீரில் 20 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

வடக்கு காஷ்மீரின் பண்டிப்போரா பகுதியில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் பதுங்கியிருப்பதாக பாதுகாப்புப் படையி னருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது.

இதையடுத்து கடந்த புதன்கிழமை பாதுகாப்புப் படையினர் அந்தப் பகுதி யைச் சுற்றி வளைத்து தாக்குதல் நடத்தி னர். தீவிரவாதிகளும் பதில் தாககுதல் நடத்தினர். இரு தரப்பினருக்கும் இடையே கடும் துப்பாக்கிச் சண்டை நடித்தது. சண்டையின் இறுதியில் 20 தீவிரவாதி கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். மேலும் தீவிரவாதிகள் பதுங்கியிருந்த 5 வீடுகளும் தரைமட்டமாக்கப்பட்டன. (ற)

# ரொனி பிளேயர் வெற்றி!

(இலண்டன்)



**பிரித்தானியப் பொதுத்தேர்தலில் ரொனி பிளேயரின் தொழிற்கட்சி மூன்றாவது தடவை யாகவும் பெரும்பான்மைப் பலத்தைப் பெற் றுள்ளது.**

வெளியான 618 ஆசனங்களுக்கான விபரங்களின் அடிப்படையில் ரொனி பிளேயரின் தொழிற்கட்சி 353 ஆசனங் களையும், கொன்சவேற்றி 194 ஆசனங் களையும், சுதந்திர ஜனநாயகக் கட்சி 59 ஆசனங்களையும் பெற்றுள்ளன.

இந்தத் தேர்தலில் பெரும்பான் மையைப் பெறுவதற்கு 324 ஆசனங்களைப் பெற வேண்டும்.

கடந்த முறை 167 ஆசனங்கள் கூடு தலாகப் பெற்ற ரொனி பிளேயரின் தொழிற் கட்சி இம்முறை 66 ஆசனங் களை மட்டுமே கூடுதலாகப் பெற்று ஆட்சி அமைக்குமென எதிர்பார்க்கப்படு கின்றது. (ற-9,2)

# பின்லேடன் தலையை வெட்டி எடுத்துவர அமெரிக்க உளவுப்படை உத்தரவிட்டது

## முன்னாள் அதிகாரி திடுக்கிடும் தகவல்

(வோஷிங்டன்)

பின்லேடனின் தலையை வெட்டி எடுத்து வரும்படி அமெரிக்க உளவுப் படை உத்தரவிட்ட திடுககிடும் தகவலை முன்னாள் அதிகாரி ஒருவர் வெளி யிட்டிருக்கிறார்.

கடந்த 2001ஆம் ஆண்டு செப்டம்பர் 11ஆம் திகதி அமெரிக்கா மீது அல் கெய்டா இயக்க தற்கொலைப்படை தீவிர வாதிகள் அதிரடித் தாக்குதல் நடத்தி னார்கள். நியூயோர்க் நகரில் உள்ள உலக வர்த்தக மையக் கட்டடம் தகர்க் கப்பட்டதில் 3 ஆயிரத்துக்கும் அதிகமான வர்கள் பலியானார்கள். அதைத் தொடர் ந்து அல்கெய்டா இயக்கத் தலைவன் ஒசாமா பின்லேடனைத் தீர்த்துக்கட்ட அமெரிக்கா அதிரடி நடவடிக்கை எடுத்தது.

ஆப்கானிஸ்தானில் பின்லேடன் பதுங்கியிருந்தான். அங்கு அவனுடைய ஆதரவு இயக்கமான தலிபான் ஆட்சி நடைபெறறு வந்தது. தலபான்களின் பிடியில இருந்து ஆப்கானிஸ்தானை விடுவித்து பின்லேட்னைப் படிக்க அமெ ரிக்க கூட்டணிப்படைகள் ஆப்கானிஸ் தானுக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

அப்போது பின்லேடனின் தலையை வெட்டி எடுத்து வருவதற்காக அமெ ரிக்க உளவுப்படை சாபில் அதிகாரி ஒருவர் ஆப்கானிஸ்தானுக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அவர் பெயர் கேரி சோரன். இந்தத் தகவலை, அமெரிக்கா வின் தேசிய பொது வானொலி நிகழ்ச் சிக்கு அளித்த பேட்டி ஒன்றில் கேரி சோரன் வெளியிட்டுள்ளார்.

உளவுப்படையில் கள அதிகாரியா கப் பணிபுரிந்து ஓய்வுபெற்ற சோரன் அதுபற்றிக் கூறும்போது, பின்லேடனின் தலையை வெட்டி ஐஸ் பெட்டியில் போட்டு எடுத்து வரும்படி உளவுப்படை அதி காரி காபர் பிளாக் தனக்கு உத்தர விட்டதாகத் தெரிவித்தார்.

இதேபோல், சதித்திட்டத்தில் ஈடு பட்ட மற்றத் தீவிரவாதிகளின் தலைக ளையும் வெட்டி, ஈட்டியில் கோர்த்து முச்சந்தியில் பார்வைக்கு வைக்கும்படி யும் தனக்கு உத்தரவிடப்பட்டிருந்ததாக அந்தப் பேட்டியில் சோரன் கூறியுள்ளார். (ற)

# குண்டர் சட்டத்தின் கீழ் சிறையில் அடைத்தது செல்லுபடியாகாது

## ஜெயேந்திரர் வழக்கில் உயர்நீதிமன்றம் தீர்ப்பு

(சென்னை)

காஞ்சி சங்கரமட மேலாளர் சுந்த ரேச ஐயர் உட்பட 11 பேரைக் குண்டர் சட்டத்தின் கீழ் தமிழக அரசு கைது



செய்தது செல்லாது என்று சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இவர்கள் வெளியே இருந்தால் பொது அமைதிக்குத் தீங்கு ஏற்படுமென்று அரசு தரப்பில் கூறியது நிருபிக்கப்படவில்லை என்றும் நீதிமன்றம் தெரிவிததுள்ளது.

கோவில் மேலாளர் சங்கரராமன் கொலை வழக்கில் சங்கராச்சாரியார்கள் ஜெயேந் திரர், விஜயேந்திரர் உள்ளிட்ட 25பேர் கைதுசெய்யப்பட்டனர். இவர்களில் 11 பேர் குண்டர் சட்டத்தின் கீழ் சிறையில டைக்கப்பட்டனர். குண்டர் சட்டத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொண்டதை எதிர்த்து சுந்தரேச ஐயர், ரகு, அப்பு, கதிரவன் உள்ளிட்ட 11பேர் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். இதன் மீது இரு தரப்பு வாதங்களும் கடந்தவாரம் முடி வடைந்ததையடுத்து, நீதிபதிகள் கற்பக விநாயகம், நாகப்பன் ஆகியோர் நேற்று முன்தினம் தீர்ப்பு வழங்கினர்.

சுந்தரேச ஐயர், ரகு உள்ளிட்டோரை குண்டர் சட்டத்தின் கீழ் சிறையிலடைத் தது சட்ட விரோதமானது என்றும், இந்த நடவடிக்கை செல்லுபடியாகாது என்றும் நீதிபதிகள் தீர்ப்பில் கூறினார்.

இந்தப் பதினொரு பேரும் வெளி யிலிருந்தால் பொது அமைதிக்குத் தீங்கு ஏற்படும் என்று அரசு தரப்பு கூறியது நிருபிக்கப்படவில்லை என்று தெரிவித்த நீதிபதிகள் குண்டர் சட்டத்தின் கீழ் சிறை யிலடைக்கப்பட்ட 11 பேரையும் விடுதலை செய்ய உத்தரவிட்டனர்.

இந்த பதினொரு பேரும் வேறு வழக் குகள் காரணமாகச் சிறையில் அடைக் கப்படவில்லையென்றால் அவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று நீதி பதிகள் உத்தரவிட்டனர். ஆனால் சுந்த ரேச ஐயர், ரகு ஆகியோர் மீது கஞ்சா வைத்திருந்தது, கொலைச்சதி உள்ளிட்ட வழக்குகளட போடப்பட்டுள்ளதால் அவா கள் உடனடியாகச் சிறையிலிருந்து விடுதலையாகும் வாயப்பு இல்லையெனத் தெரிகிறது. (து)

# ஜப்பானில் இரண்டாம் உலகப்போர் குண்டுகள்

ஜப்பானில் இரண்டாம் உலகப்போர் காலத்தினைச் சேர்ந்த ஒரு டொன் எடை யுள்ள வெடிக்காத குண்டு ஒன்று மக்கள் நெருக்கமுள்ள குடியிருப்புப் பகுதியிலி ருந்து கண்டெடுக்கப்பட்டது.

அமெரிக்க இராணுவத்தால் போடப் பட்ட குண்டுகள் அவையென ஜப்பான் வட்டாரத் தற்காப்புப் படை அலுவல கம் தெரிவித்தது. அடுக்குமாடிக்குடியிருப்பு ஒன்று கட்டுவதற்காக பூமியைத் தோண் டியபோது இந்த வெடிக்காத குண்டு இருப்பது கண்டெடுக்கப்பட்டது.

இந்த வெடிகுண்டைச் செயல் இழக் கச் செய்வதற்காக அக்குடியிருப்பிலி ருந்த 4000 க்கும் மேற்பட்ட மக்கள் கடந்த புதன்கிழமை பாதுகாப்பாக வெளி யேற்றப்பட்டனர். இரண்டாம் உலகப் போரின்போது வீசபபட்ட ஏராளமான வெடிக் காத குண்டுகள் ஜப்பானிலும, ஜெர்மனி யிலும் அடிக்கடி கண்டெடுக்கப்படுவது வாடிக்கையாகிவிட்டது.

இவற்றை முழுமையாக அகற்ற குறைந்தது 150 ஆண்டுகளாவது பிடிக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது. (ற)

# எகிப்தில் 2300 ஆண்டுகால மம்மி

எகிப்தில் 2300 ஆண்டுகள் பழமை யான மம்மி ஒனறு கண்டுபிடிக்கபபட்டது.

தலைநகர் கெய்ரோவிற்கு அருகே உள்ள சகாரா பிரமிட் வளாகத்தில் இரு பது அடி ஆழமுள்ள ஒரு மரப்பெட்டிக் குள்ளிருந்து இந்தப் பதப்படுத்தப்பட்ட உடல் கிடைத்துள்ளது.

பளபளக்கும் தங்கக் கவசத்தினை முகத்தில் அணிந்துள்ள அவ்வுடல் பரோ னிக் அரச வம்சத்தைச் சேர்ந்த மன்னரு டையதாக இருக்கலாம் என தொல் பொருள் ஆராய்சசியாளகள கூறுகின்ற னர். இவ்வுடல் குறித்து ஆராய்ச்சி செய் யப்பட்டு வருகிறது.

முழுமையான ஆராய்ச்சிகள் முடிந்த பின்னர் இவ்வுடல் கெய்ரோவின் பழ மையான அருங்காட்சியகத்தில் வைக கப்படவுள்ளது. (ற)

# புதிய நாடுகள் வீட்டோ அதிகாரத்தை எதிர்பார்க்கக்கூடாது -கொபி அனான்

ஐ.நா.பாதுகாப்புச் சபையில் புதி தாக உறுப்பினராகச் சேரும் நாடுகள் வீட்டோ அதிகாரத்தை எதிர்பார்க்கக் கூடாது என ஐ.நா பொதுச் செயலாளர் கொபி அனான் கூறியிருக்கிறார்.

ஐ.நா. சபையில் நடந்த சர்வதேச பெண்கள் மாநாட்டில் உரையாற்றிய கொபி அனான் இது குறித்து மேலும் கூறியதாவது,

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் ஏற் கனவே உறுப்பினர்களாக உள்ள சில நாடுகள் வீட்டோ அதிகாரத்துடன் உள் ளன. அந்த நாடுகளின் அதிகாரங்களைப் பறிக்கவேண்டும் எனக் கூறுவது நியாய மல்ல.

புதிதாக ஐ.நா. பாதுகாப்புச் சபை யில் உறுப்பினர்களாகச் சேருபவர்கள் தங்களுக்கு வீட்டோ அதிகாரம் வேண்டும என எதிர்பார்க்கக்கூடாது. அதை நினை த்துக் கூடப் பார்க்கக்கூடாது. ஐ.நா. பாது காப்புச் சபையைப் பல உறுப்பினர்கள் கொண்ட சபையாக விரிவுபடுத்துவதே முக்கிய நோக்கம். அதிக உறுப்பினர்கள கொண்ட சபையாக இருந்தால் ஜன நாயகம் மிகுந்த சபையாக இருக்கும. எனவே, மற்ற பிராந்தியங்களும் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் உறுப்பு நாடுக ளாகச் சேர முன்வரவேண்டும்.

ஐ.நா.பாதுகாப்புச் சபையை விரிவு படுத்தவேண்டும் என்ற ஒருமித்த கரு த்து அனைவரிடமும உள்ளது. எனினும் சில பிரச்சினைகளால் கருத்து வேறுபாடு நிலவுகிறது.



ஏற்கமுடியாத சில கருத்துக்களை சிலர் கட்டாயப் படுத்தும் பொழுது அல்லது சில உடன் பாடுகளை, சில திட்டங்களைப புகுத் தும் பொழுது இது போன்ற கருத்து வேறுபாடுகள் நில வுகிறது.

எனவே கூட்டு நடவடிக்கைகளில் நாம் ஒற்றுமையாகச் செயல்படவேண்டும். பாதுகாப்புச் சபை விரிவாக்கத்திற்கு இரண்டு திட்டங்கள் உண்டு. முதலில் ஆறு நிரநதர உறுப்பு நாடுகளைக் கூடு தலாகச் சேர்க்க வேண்டும். மற்ற நாடு களைத் தற்காலிக உறுப்பு நாடுகளாகச் சேர்க்கவேண்டும். இவர்கள் நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பித்துக கொள்ளவேண்டும்.

இரண்டாவதாக புதிய உறுப்பி னர்களுக்கு வீட்டோ அதிகாரம் கொடுக் கக்கூடாது. இந்தியா, ஜப்பான், ஜெர் மனி மறறும் பிரேசில் ஆகிய நாடுகள் நிரந்தர உறுப்பினராவதற்குத் தீவிரமாக முயற்சித்து வருகின்றன. எனினும் தற் காலிக் உறுப்பினர்களாக இருக்க இந்த நாடுகள் விரும்பவில்லை. இவ்வாறு கொபி அனான் பேசினார். (ற)

# இந்தியாவில் 10 நகரங்களில் நில நடுக்க ஆபத்து அதிகம்

(புதுடில்லி)

இந்தியாவில் 10 நகரங்கள் நில நடுக்கம் ஏற்படும் ஆபத்து அதிகமுள் ளவை என்று மத்திய உள்துறை இணை அமைச்சர் எஸ்.ரகுபதி கூறியுள்ளார்.

இந்தியாவில் 38 நகரங்கள் நில நடுக்கம் ஏற்படும் பகுதிகளில் அமைந் துள்ளன. இவற்றில் 10 நகரங்கள் அதிக ஆபத்துள்ளவை என்று அறியப்பட்டுள்ளது.

இந்நகரங்களில் நிலநடுக்கம் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவுள்ளது. நில நடுக்கத்தைச் சமாளிக்கவும், தயாராக இருக்கவும் பாதுகாப்பான வகையில் கட்டடங்களைக் கட்டவும் பேரிடர் நிர் வாகக் குழுக்கள் அமைக்கவும் திட்ட மிடப்பட்டுள்ளது. (ற)

இன்னா எனத்தான் உணர்தலை துன்னாமை
வேண்டும் பிறன்கண் செயல் - குறள்

வலம்புரி

# கைதிகளின் விடுதலைக்கு வழிகாணுங்கள்

சிறைச்சாலைகளில் வாழும் தமிழ்க் கைதிகள் தமக்கு விடுதலைகோரி உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். பல வருடங்களாக விளக்கம், விசாரணை எதுவும் இன்றி சந்தேகத்தின் பேரில் அப்பாவித் தமிழ் இளைஞர்கள் சிறைகளில் அடைக்கப்பட்டு உளரீதியான தண்டனை வழங்கப்படுகிறது.

பெற்றதாயை, தந்தையை, உடன்பிறப்புக்களை காணமுடியாத நிலையில் அரக்கர்கள் சூழ ஒருகூட்டுக்குள் இருந்து எத்தனை காலம் வாழ்வைக் கழிக்கமுடியும். வருடக் கணக்கில் சிறைகளில் வாழும் தமிழ் இளைஞர்களின் எதிர்காலமே இருண்டுபோய் விட்டது. அவர்களுக்காக குரல்கொடுப்பபவர்கள் எவருமே இல்லை.

விசாரணையுமின்றி, பிணையுமின்றி ஆயிரக் கணக்கான தமிழ் இளைஞர், யுவதிகள் சிறைக் கூடங்களில் ஏக்கப் பெருமூச்சுவிடுகின்றனர்.

அவர்களின் உள்ளக்குமுறல் போராட்டமாக உருவெடுத்து இருக்கிறது. மட்டக்களப்புச் சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகள் சிறைச்சாலைக் கூரைமேல் ஏறி உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்திருக்கின்றனர்.

தண்டனையாக சிறைவாசம் செய்யலாம். ஆனால் விசாரணையே இன்றி குற்றவாளியா என்றுகூட நிருபிக்கப்படாமல் தொடரும் சிறைவாசத்தை எவ்வாறு ஜீரணிக்கமுடியும்.

உலகில் ஒவ்வொரு நாடும் எதோவொரு அபிவிருத்தித்துறையில் முன்நிற்கும்போது இலங்கை அரசு மட்டும் சித்திரவதை செய்வதில் முன்நிற்பதை சர்வதேச மனிதஉரிமை அமைப்புக்களின் அறிக்கையில் இருந்து அறிய முடிகிறது.

அவ்வாறு சித்திரவதைக்கு ஆளானவர்களில் இந்த உலகத்தையே விட்டுப் போனவர்கள் தவிர்ந்த ஏனையோரே தற்போது சிறைகளில் வருடக்கணக்கில் அடைபட்டுக் கிடக்கின்றனர்.

சிங்கள தேசத்தின் சிறைகளில் தமிழ்க் கைதிகளின் எண்ணிக்கை அதிகரித்துவிட்டால் அதனைக் குறைப்பதற்காக சிறைக் காவலர்கள் சிங்களக் கைதிகளிடம் வாள், பொல்லுக்கொடுத்து தமிழ்க் கைதிகளை தாக்கிக் கொலை செய்விப்பர். இது உலகில் எங்குமே நடக்கமுடியாத கொடுமையாகும்.

தமிழ்க் கைதிகளின் விடுதலைக்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். தொடரும் விளக்கம், விசாரணையற்ற சிறைவாசம் உடனடியாக நீக்கப்பட்டு நீதி அடிப்படையில் கைதிகள் விசாரணை செய்யப்பட்டு விடுதலை செய்யப்படவேண்டும்.

சிறைகளில் வாடும் கைதிகளின் மன உளைச்சலை போக்கி அவர்களின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்த ஆட்சியில் உள்ளோர் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவற்றைப் புறக்கணித்து கைதிகளின் விடுதலைக்கு அரசியல்வாதிகள் குரல்கொடுக்காவிட்டால் புதிய மாற்றம் ஒன்று ஏற்பட்டு அவர்களின் விடுதலைக்கு மக்கள் திரண்டு வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

# ஆட்சி அதிகாரத்தை உறுதிப்படுத்துவதிலேயே அரசாங்கம் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது

## -பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்

(கொழும்பு)



எரிபொருளின் விலையை உயர்த்துவதற்கு அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானம் மக்களின் நலனுக்கு உகந்ததல்ல என ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜி.எல்.பீரிஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எரிபொருளின்விலை அதிகரிக்கப்பட்டதினால் அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்பை தடுக்கமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு அத்தியாவசியப் பொருட்களின்விலை அதிகரித்த வண்ணம் உள்ளது. தற்போது காஸின்விலை 100ரூபாவால் அதிகரித்துள்ளது. பெற்றோல் 6 ரூபாவாகவும டீசல்விலை 45ரூபாவாகவும், மண்ணெணணை 3 ரூபாவாலும் அதிகரித்துள்ளன.

அதைவிட, விசேடமாக டீசல் மற்றும் மண்ணெண்ணை ஆகியவற்றின் விலைகள் அதிகரிக்கப்பட்டமையினால் மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்பைத் தடுக்கமுடியாதுள்ளது. இந்த முடிவு மக்களின் நலனைக் கருத்தில்கொள்ளாது எடுக்கப்பட்டுள்ளது.

அன்று இந்த அரசாங்கம் வழங்கியவாக்குறுதிகள் என்ன? 2004ஆம் ஆண்டு அதிகாரத்துக்கு வருவதற்கு பல வாக்குறுதிகளை வழங்கி வந்தனர். அந்த வாக்குறுதிகளில் மக்களுக்குத் தேவையான சலுகைகளை வழங்குவது என்பது பிரதான வாக்குறுதியாகவிருந்தது.

அத்துடன், வாழ்க்கைச் செலவுக்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்று கூறினர். இவ்வாறு பல வாக்குறுதிகளை கூறியே கூட்டமைப்பு அரசாங்கம் மக்களின் ஒத்துழைப்பைப் பெற்று ஆட்சியைப் பிடித்தது.

ஆனால் ஆட்சிக்குவந்து அமர்ந்தபின்னர் இன்று எதனையும் சிந்தித்துப் பார்ப்பதாகத் தெரியவில்லை. அதிகாரத்தை உறுதிப்படுத்துவதிலேயே அரசாங்கம் முழுமையாக ஈடுபட்டுள்ளது என்றார். (ந-8)

# கண்தானம் செய்யும் நாடுகளில் இலங்கை இரண்டாம் இடத்தில்!

## 41,507 கண்கள் வெளிநாடுகளுக்கு வழங்கப்பட்டுள்ளன

(கொழும்பு)

கண்பார்வையற்றோருக்கு இலவசமாக கண்களைத் தானம்செய்யும் நாடுகளில் இலங்கை இரண்டாம் இடத்தை வகிப்பதாக இலங்கை கண்தான சங்கத்தின் முகாமையாளர் தெரிவித்தார்.

இதுவரை 57 நாடுகளின் 114 நகரங்களுக்கு 41ஆயிரத்து 507 கண்களை இலங்கை இலவசமாக வழங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் இதுகுறித்துத் தெரிவிக்கையில்,

நாடளாவிய ரீதியில் 458 கண்தான சங்கக்கிளைகள் இயங்கி வருகின்றன. இதுவரை 4 இலட்சத்துக்கும் அதிகமானோரிடமிருந்து கண்தானத்திற்கான விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன.

இதில் கிடைக்கப்பெற்றுள்ள ஒரு இலட்சம் கண்களுள் 27ஆயிரம் கண்கள் இலங்கையில் பயன்படுத்தப்பட்டுள்ளன. எனவே எமக்குக்கிடைக்கும் கண்களில் எமது நாட்டின் தேவை பூர்த்தியாக்கப்பட்டதன் பின்னரே ஏனையவை ஜப்பான், இந்தியா, பாகிஸ்தான், கொரியா உள்ளிட்ட மற்றும் பல நாடுகளுக்கு இலவசமாக அனுப்பிவைக்கப்படுகின்றன.

ஏற்கனவே கண்தானத்திற்குப் பதிவுசெய்தவர்கள் மாத்திரமின்றி, எவரும் இறந்தவுடன் தமது கண்களை ஒப்படைக்கலாம்.

இளைஞர்களின் கண்ணாயின் 6 அல்லது 8 மணித்தியாலங்களுக்குள்ளும் வயதானவர்களின் கண்ணாயின் 4 மணித்தியாலங்க்ளுக்குள்ளும் அருகிலுள்ள கண்தான சங்கத்திற்கு அறிவிப்பதன்மூலம் கண்களை வழங்கலாம்.

வைரஸ் நோயால் பீடிக்கப்பட்டவர்களின் கண்கள் பெறப்படமாட்டாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-9)

# திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய நிலையத்திற்கு ரூ.44 மில்லியனில் 4 மாடிக்கட்டடம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின யாழ்.பிராந்திய நிலையத்திற்கு 44 மில்லியன் ரூபா செலவில் நான்கு மாடிக் கட்டடம் கட்டப்படவுள்ளது. இக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நேற்றுக்காலை 7.00மணிக்கு திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய இயக்குநர் ச.ஞானேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொணட நாவல திறந்த பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் உமா குமாரசாமி கட்டடத்திற்கான அடிக்கல்லை நாட்டி வைத்தார்.

மேலும், இந்நிகழ்வில் யாழ்மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ, யாழ.பல்கலைக்கழக துணைவேந்தா பேராசிரியர் சு.மோகனதாஸ், யாழ்மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் ரி.இளம்பரிதி ஆகியோர் உட்பட மற்றும் பல பிரமுகர்களும் கலந்து கொண்டனர். (ந-19)

# கணனிமயப்படுத்தப்பட்ட சேவை

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி மக்கள் வங்கியின் அலுவல்கள் யாவும் இப்போது கணனி மயப்படுத்தப்பட்டுள்ளன.

இதனால் வங்கியின் சேவைகளை வாடிக்கையாளர்கள துரிதமாகப் பெறமுடியும்.

வங்கியன் கணனிச் செயற்பாடுகளை மக்கள் வங்கியின வடபிராந்திய முகாமையாளர் எம்.கே.சிவபாதவிருதயர், பிராந்திய உதவி முகாமையாளர் துரைசிங்கம், ரகு ஆகியோர் அண்மையில் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி கிளை, கன்னாதிட்டிக்கிளை, யாழ்.பிரதானவீதி கிளை, சுன்னாகம் மற்றும் சாவகச்சேரிகிளை ஆகியன இதுவரை கணனி மயப்படுத்தப்பட்டவையென்பது குறிப்பிடத்தக்கது.(ந-16)

# ஈஸ்வரம்மா தினவிழா

(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீசத்திய சாயிசேவாநிலையம் நடாத்தும் ஈஸ்வரம்மா தினவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ்.பகவான் ஸ்ரீசத்தியசாயி சேவா நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

இவ் விழாவில் யாழ்.இந்துமகளிர் கல்லூரி அதிபர் சரஸ்வதி ஜெயராஜாவின் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து பிற்பகல் கலைநிகழ்ச்சிகள் பல இடம்பெறவுள்ளன. (ந-2)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

தீமையை நன்மை சமன் செய்கிறது. மலையின் உச்சியில் இருப்பவன், அந்தக் கனதிற்கு எல்லாம் நன்மையே என்று எண்ணிக் கொள்கிறான். பள்ளத்தில் இருப்பவன் உலகம் தீமை என்கிறான். ஆனால அனைத்திலிருந்தும் விலகித தனித்து நின்று பார்ப்பவன் எங்கும் தெய்வீக லீலையைக் காண்கிறான்

சுவாமி விவேகானந்தர்

# வல்லையூடான போக்குவரத்து திங்கள் முதல் தடைப்படும்!

## தற்காலிக பாதையூடாக மட்டுப்படுத்தப்பட்ட சேவை

(யாழ்ப்பாணம்)

வல்லைப் பாலத்தினூடான போக்குவரத்துக்கள் நாளை மறுதினம் முதல் தடைசெய்யப்படவுள்ளது. அப் பாலத்தினை புனரமைப்புச் செய்யும் பணி நாளை மறுதினம் ஆரம்பமாகவுள்ளதாலேயே போக்குவரத்துக்கள் தடைசெய்யப்படவுள்ளன.

இதற்குப் பதிலாக பாலத்திற்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக் பாதையூடாக மட்டுப்படுத்தப்பட்ட அளவில் போக்குவரத்து இடம்பெறவுள்ளது.

தற்காலிக பாதையூடாக கனரக வாகனங்கள் செல்ல தடைவிதிக்கப்பட்டுள்ளது. பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் பஸ்கள் பயணிகளை இறக்கிய பின்னர் தற்காலிக பாதையூடாக மறுபக்கம் சென்று பயணிகளை ஏற்றிச் செல்லவேண்டும்.

வல்லைப் பாலம் திருத்தும் பணிகள் இம் மாதம் 9 ஆம் திகதி ஆரம்பமாகி ஒரு மாத காலத்திற்குள் முடிவடையலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள பாதையூடாக வாகனங்களை செல்லவிடுதல் தொடர்பாக நாளை பரீட்சார்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. (த-19)

# சிறுவர் இல்ல பொறுப்பாளர்களுக்கு யாழ். நீதிவான் நீதிமன்றம் அழைப்பு

(சில்லாலை)

சிறுவர் இல்லங்களின் பொறுப்பாளர்கள் உடனான கலந்துரையாடல் இன்று முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நீதிவான் இ.த. விக்னராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலின்போது சிறுவர் இல்லங்களை பதிவு செய்தல், அவற்றின் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துதல் என்பன தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளது.

யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குட்பட்ட சகல சிறுவர் இல்லங்களின் பொறுப்பாளர்களையும் தவறாது இக் கலந்துரையாடலுக்கு சமுகமளிக்குமாறு யாழ். நீதிவான் நீதிமன்ற பதிவாளர் க. மீரா அறிவித்துள்ளார். (ச-58)

# இங்கிலாந்துப் பிரதமராக...

உறுப்பினர்களை தெரிவுசெய்வதற்கான பொதுத் தேர்தல் நேற்று முன்தினம் நடைபெற்றது. 30 நாட்கள் நடைபெற்ற தேர்தல் பிரசாரத்திற்கு பின்னர் நேற்று முன்தினம் வாக்குப்பதிவு நடைபெற்றது.

பிரிட்டிஷ் நேரப்படி நேற்று முன்தினம் காலை 7 மணிமுதல் இரவு 10 மணிவரை வாக்கெடுப்பு நடைபெற்றது. இத் தேர்தலில் பெரும்பான்மை பெறுவதற்கு 324 ஆசனங்களைப் பெறவேண்டும். ஆனால் கடந்த இரண்டு முறைத் தேர்தல்களைவிட இம்முறை 66 ஆசனங்களை மட்டுமே கூடுதலாகப் பெற்று ரொனி பிளேயர் ஆட்சி அமைப்பார் எனக் கருதப்படுகிறது.

1997 ஆம், 2001 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தல்களில் வெற்றிபெற்று ரொனி பிளேயர் ஆட்சி அமைத்து இருந்தார் என்பது நினைவுகூரத்தக்கது.

தேர்தல் வெற்றி தொடர்பாக கருத்து வெளியிட்ட ரொனி பிளேயர், ஈராக் விவகாரம் குறித்து மக்களிடையே பல்வேறு கருத்து வேறுபாடுகள் நிலவியபோதும் இத் தேர்தலில் மக்கள் ஒன்றுபட்டிருப்பது தெரிகின்றது. தமது கட்சிக்கு மக்கள் அளித்த ஆதரவைக் கொண்டு பொறுப்புடனும் புத்திசாலித்தனத்துடனும் புதிய அரசை அமைத்து வழி நடத்தப்போவதாக தெரிவித்தார்.

இதேவேளை ரொனி பிளேயரின் வெற்றியினையீடுத்து இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது வாழ்த்துச் செய்தியினை பிளேயருக்கு அனுப்பிவைத்துள்ளார். (ச-8)

# மட்டு...

உறுப்பினர்கள் தற்பொழுது கொழும்பில் தங்கியிருப்பதால் இதுவரை எவரும் அவர்களைச் சந்திக்கவில்லை.

நேற்று பாராளுமன்றத்தில் ஊடகவியலாளர் மாமனிதர் டி. சிவராம் படுகொலை தொடர்பான விவாதத்தில் கலந்துகொள்ளும் நோக்கில் கொழும்பில் தங்கியிருந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் இன்று மட்டக்களப்பு திரும்பியவுடன் இவர்களைச் சந்திப்பார்களென எதிர்பார்க்கப்படுகின்றது. (ச-4)

# பொதுக்கட்ட...

அதேவேளை அண்மைக் காலங்களில் அரசாங்கத்தில் அங்கம் வகித்துவரும் ஜே.வி.பி. பொதுக் கட்டமைப்புத் தொடர்பில் தெரிவித்துவரும் கருத்துக்களை பெரிதாக அலட்டிக்கொள்ளத் தேவையில்லை என்றார்.

நாங்கள் இங்கு வந்தமையானது இலங்கையை அபிவிருத்தி செய்யவேயாகும். அரசியலில் ஈடுபடுவதற்கில்லை என்றார் அவர்.

சுனாமி அனர்த்தம் காரணமாக வடக்குக் கிழக்குப் பிரதேசம் பாரிய அழிவுகளை சந்தித்துள்ளது. எனவே அவர்களுக்கு உதவிகள் வழங்கவேண்டிய கட்டாய நிலைக்கு நாங்கள் தள்ளப்பட்டுள்ளோம். இருந்தும் அரசாங்கம் வட - கிழக்கின் அபிவிருத்தியைக் கருத்திற்கொண்டு செயற்பட விரும்பினால் அதற்கான ஒத்துழைப்பினை வழங்க உலகவங்கி தயாராக விருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (ச-4-15)

# வவுனியாவில்...

சென்றடையும்.

ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள், மிரட்டல்கள், படுகொலைகள் என்பன உடன் நிறுத்தப்படவேண்டும் என கோரியே இம்மௌனப் போராட்டம் நடைபெறவுள்ளது. பேரணியின் முடிவில் வவுனியா அரச அதிபரிடம் ஜனாதிபதிக்கான மகஜர் கையளிக்கப்படவுள்ளது. (ச-8)

# மட்டக்களப்பு...

சடலங்களையும் நேற்று மாலை பொலிஸார் வாழைச்சேனை வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

இதேவேளை விடுதலைப் புலிகள் மற்றும் கருணா அணியினருக்கிடையே நடந்த மோதல் காரணமாக இவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயாரட்ணாயக்க தெரிவித்துள்ளார். (ச-4)


மே 7 முதல்

பா்டநூல் வெளியீட்டிலும் நாடளாவிய விற்பனை மேம்படுத்தலிலும்
கொழும்பில் முன்னணி வகிக்கும் லங்கா புத்தகசாலை
அனுசரணையுடன்
யாழ். பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தின்

மாபெரும் புத்தகக் கண்காட்சியும்
மலிவு விற்பனையும்

அனைத்துத் தரப்பினருக்கும் ஏற்ற உள்நாட்டு வெளிநாட்டு (ஆங்கில, தமிழ்) பாடநூல்களும், அகராதிகள், கவிதைகள், சிறுகதைகள், சமய இலக்கியங்கள், மருத்துவ நூல்கள் மற்றும் பல

இடம் : யாழ். பல்கலைக்கழக வணிகத்துறை விரிவுரை மண்டபம்
காலம் : 2005 மே மாதம் 7 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை
நேரம் : காலை 9.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை (புதியநேரம்)
(வார இறுதி நாட்களும், விடுமுறை நாட்களும் உட்பட)

சிறப்பு விலைக்கழிவு

தொடர்புகளுக்கு
தலைவர், வணிக மாணவர் மன்றம்,
யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்
(C-1354)



யாழ்ப்பாணம்
08.05.05 முதல்
சரத்குமார், அறிமுகம் ரமேஷ், பூஜா மற்றும் பலர் நடித்த


கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30






# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் ஐந்தாம் ஆண்டு நிறைவு நிகழ்ச்சிகள் - 2005

## நினைவுப் பேருரைகள், சான்றோர் கௌரவிப்பு

தலைவர் : கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன்
(பீடாதிபதி, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி)
களம் : பிரார்த்தனை மண்டபம்
(யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி)
காலம் : 2005 வைகாசி 8, 16, 20, 25, 30, ஆனி 05

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

### நிகழ்ச்சி I

**பேராசிரியர் சு.வித்தியானந்தன் நினைவுப் பேருரை**



விடயம் : சுந்தரனாரின் மனோன்மணியம் காலமும் கருத்தும்
அறிமுப்படுத்துநர் : கலாநிதி கி.விசாகரூபன்
பேருரையாளர் : பேராயர் கலாநிதி ஜெபநேசன்
அனுசரணை : பேராசிரியர் வித்தியானந்தன் அறக்கட்டளை

*08.05.2005 மாலை 4.30 மணி*

### நிகழ்ச்சி II

**பேராசிரியர் ப.சந்திரசேகரம் நினைவுப் பேருரை**



விடயம் : விடுதலைக்கான கல்வியில் ஆசிரியர், மாணவர் உறவின் பெறுமானங்கள்- கல்வியியல் தத்துவார்த்த வரலாற்று நோக்கு
அறிமுப்படுத்துநர் : S.K.யோகநாதன் M.Ed
பேருரையாளர் : திருமிகு குமாரசாமி சண்முகநாதன் (B.Ed.M.A.Ed) பிரதிக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம் வலயம்

*16.05.2005 மாலை 4.30 மணி*

### Programme III

**Prof. K.Kailasapathy Memorial Lecture**



Subject: Education in a Battered, colonialist Society, some reflections on the Education System developed among Srilankan Tamils during the late 19th century and during the 20th century.
Introduce By: T.Thevathayalan
Conduct By: Professor V.Nithiyanandam ph.D
Dept of Economics, University of Jaffna

*20.05.2005, 4.30 p.m*

### நிகழ்ச்சி IV

**பேராசிரியர் அ.துரைராஜா நினைவுப் பேருரை**



விடயம் : பண்டைத் தமிழரின் வானியற் கல்விச் சிந்தனைகள்
அறிமுப்படுத்துநர் : திருமதி J.தியாகலிங்கம் M.Phil(Ed)
பேருரையாளர் : கலாநிதி மா.வேதநாதன் (B.A(Hons)M.A, ph.D
சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்

*25.05.2005 மாலை 4.30 மணி*

### நிகழ்ச்சி V

**பேரறிஞர் கலாநிதி சொக்கன் நினைவுப் பேருரை**



விடயம் : இடைநிலைப் பாடசாலைகளில் கல்வி வழிகாட்டல், ஆலோசனை சேவை, நோர்வே, இலங்கை, எத்தியோப்பியா தழுவிய ஒப்பீட்டாய்வு
அறிமுப்படுத்துநர் : திரு. கி.கிருஸ்ணயோகன் M.Ed
பேருரையாளர் : கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன்
திருமிகு பாலசுப்ரமணியம் தனபாலன் M.Phil

*30.05.2005 மாலை 4.30 மணி*

### நிகழ்ச்சி VI



**சான்றோர் கௌரவிப்பு**

"எம்மண்ணின் பொதுப்பணிகள், வைத்திய சேவை, சமூகப்பணிகள், கல்விப் பணிகள் ஆற்றிவரும் தன்னலங்கருதாக் கருமவீரர்" வைத்தியக் கலாநிதி லயன் வை.தியாகராசா அவர்கள்

*05.06.2005*

*யாழ். தேசிய கல்வியியற் சமூகத்தினரால் கௌரவிக்கப்படுவர்*

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

பிடாதிபதி, உப பீடாதிபதிகள்,
கல்வியியலாளர்கள், பதிவாளர்
கல்விசாரா ஊழியர், முகிழ்நிலை ஆசிரியர்கள்


யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் ஐந்தாவது ஆண்டு நிறைவு நிகழ்ச்சிகள் சிறப்புற வாழ்த்துகின்றோம்
கிருஸ்ணா ஸ்சேவிஸ் ஸ்ரேசன்
KRISHNA SERVICE STATION
சி.கிருஸ்ணபிள்ளை பழைய வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய்
T.PNo: 021 - 222 6816
(C-1366)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.05.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.